35

வெளியீடு எண் 547.

உ

சிவமயம்

கொற்றவன்குடி உமாபதிதேவ நாயனார்

அருளிச்செய்த

# சங்கற்ப நிராகரணம்

( உரைநடையுடன் )

தருமையாதீனம்

1963

வெளியீடு எண் 547.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

கொற்றவன்குடி உமாபதிதேவ நாயனுர்

அருளிச்செய்த

# சங்கற்ப நிராகரணம்

[உரைநடையுடன்]

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனம்

25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்களது

திருவுள்ளப்பாங்கின் வண்ணம்

ஜன்மநட்சத்திர விழாமலராக

வெளியிடப் பெற்றது.

தருமையாதீனம்

1963

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# முன்னுரை

சித்தாந்த சாத்திரம் பதினான்கில் முடிவாய் உள்ளது சங்கற்ப நிராகரணம். இது, சிவஞான சித்தியின் சுபக்கத்தோடு ஒத்தது. பொய்யைப் பொய் என்று கழித்தால் அல்லாமல், மெய்யை மெய் என்று உணர்தல் இயலாத தாகும். அதனால், பூருவ பக்கமாய் உள்ள பிற சமயங்களை அருணந்தி தேவ நாயனார் தமது சித்தியாரில் முதற்கண் மறுத்துப் பின்னர் சுபக்கத்தில் சித்தாந்தம் கூறினார். அதன்கண் வெளிப்படையாக மறுக்கப்பட்டவை புறச் சமயங்களே. அக்சமயங்களை அங்ஙனம் நுட்பமாக மறுக்க எழுந்தது இந்நூல்.

சமயங்களை அவற்றை உடையவரது சங்கற்பமாகவும் (கொள்கையாகவும்) மறுப்புக்களை ஒவ்வொரு சமயத்திற்கும், அடுத்து மேல்நிலையில் உள்ள சமயத்தவர் மறுப்பதாகவும் முறையாக் வைத்து, முடிவில் சித்தாந்தத்தை வைத்துக் கூறியுள்ள முறை அறிந்து இன்புறத்தக்கது. இந்நூலில் தருக்க முறைகள் யாவும் அமைந்துள்ளன என்பதை ஆசிரியரே கூறியுள்ளார். இது செய்யப்பட்ட காலம் சாலிவாகன சகம் 1235 (கி. பி. 1313).

சித்தாந்த நூல்கள் அனைவருக்கும் பயன்படவேண்டும் என்னும் திருவுளத்தினுல், அவைகள் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களது உரைநடையுடன் வெளிவரத் திருவருள் பாலித்துவரும் திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் அருளாணையால், இதுபொழுது இச்சங்கற்ப நிராகரண நூல், மேற்குறித்த உரைநடையுடன், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது ஜன்ம நட்சத்திர வெளியீடாக வெளிவருகின்றது. சுத்தாத்துவித சித்தாந்த பரமுத்தியை நுண்ணிதின் விளக்கும் இந்நூல் வெளிவரத் திருவுளம் பற்றிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது பெருங் கருணைத் திறத்திற்குச் சைவ உலகம் பெரிதும் நன்றி யறியுங் கடப்பாடுடையது.

இதனை நன்கு பதிப்பிக்கும் பணியை அடியேனுக்கு அளித்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது திருவடித் தாமரைகளுக்கு அடியேன் எனது மன மொழி மெய்களால் ஆகிய பெருவணக்கங்களைச் செலுத்திக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள்

அருளாணைப்படி,

தருமையாதீனம்,
13—11—63.

அடியேன்
சி. அருணைவடிவேலு முதலியார்,
பேராசிரியர், பல்கலைக்கல்லூரி.



அடியார்க் கெளியனென் றம்பலவ னேஎழுதும்
படியாஞ்சீர் பெற்றஉமா பதிதேவ நாயனர்,

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

கொற்றவன்குடி உமாபதிதேவ நாயனார்

அருளிச்செய்த

# சங்கற்ப நிராகரணம்

## விநாயகர் வணக்கம்

(1) திருந்திய வருந்தவம் பொருந்துபன் முனிவர்
கமையாக் காத லமையாது பழிச்சு
நிகரில் செக்கர்ப் புகர்முகத் தெழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப்பெருங் கோட்டுத்
தழைசெவி மழைமதப் புழைநெடுந் தடக்கை
வாட்டரு மும்மை நாட்ட நால்வாய்ப்
பாச மங்குசந் தேசுறு மெயிற்றொண்
கனியிவை தாங்கும் புனித நாற்கரத்
தங்கதங் கடகம் பொங்கிழை யார
நிறைமணிச் சுடிகைக் கறையணற் கட்செவி
கொண்ட திண்பெரும் பண்டிக் குறுந்தாட்
களிறுத னிருகழல் கருதா
வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே.

# பாயிரம்

(2) பெருங்கட லுதவுங் கருங்கடு வாங்கிக்
கந்தரத் தமைத்த வந்தமில் கடவுள்
பாலரை யுணர்த்து மேலவர் போலக்
கேட்போ ரளவைக் கோட்படு பொருளா
லருளிய கலைக ளலகில வாலவை
பலபல சமயப் பான்மைத் தன்றே, அஃதால்
லந்நூற் றன்மை யுன்னிய மாந்த
ரிதுவே பொருளென் றதனிலை யறைதலின்
வேற்றோர் பனுவ லேற்றோர்க் கிசையா
மாறு பாடு கூறுவ ரதனுற்
புறச்சம யங்கள் சிறப்பில வாகி
யருளின் மாந்தரை வெருளுற மயக்கி
அலகைத் தேரி னிலையிற் றீரு
மீங்கிவை நிற்க நீங்காச் சமய
மூவிரு தகுதி மேவிய தாமு
மோன்றோ டொன்று சென்றுறு நிலையி
லாறும் மாறா வீறுடைத் திவற்று
ளெவ்வ மில்லாச் சைவநற் சமயத்
தலகி லாகம நிலவுத லுளவவை
கனக மிரணியங் காஞ்சன மீழந்
தனநிதி யாடகந் தமனிய மென்றிப்
பலபெயர் பயப்பதோர் பொருளே போலப்
பதிபசு பாச விதிமுறை கிளக்கும்
வாய்ந்த நூல்க ளாய்ந்தன ராகி
யாசா னுகி வீசிய சமத்துட

னேழஞ் சிருநூ றெடுத்த வாயிரம்
வாழுநற் சகன மருவா நிற்பப்
பொற்பொது மலிந்த வற்புத ஞானி
யாரும் வீழவிற் பொற்றே ராலயத்
தேரு வேண்மர் நிரையி லிருப்ப
மயங்கு வாத மாயா வாதி
முயங்கிட வொருதலை முதுவேதிர் மணிசேர்
பெண்ணை சூழ்ந்த வெண்ணையம் பதிதிகழ்
மெய்கண் டவனருள் கைகண் டவர்களி
லொருவ ரொருதலை மருவி யிருப்ப
வஞ்சப் பிறவிக் கஞ்சிவந் தொருவ
னேதிறை யருளென வீதெனு மாயா
வாதியை யயலினர் மறுதலைத் தருடர
மற்றவ ரயலின ரவருரை மறுத்துச்
சொற்றர வயலின ரவருந் தொலைவுற்
றின்னே யெவரு முன்னே கழியுழி
யாங்கய லிருந்த வருளின ரழகிது
நீங்கள்சங் கற்ப நிராகரித் தமையென
மற்றவ ருரைத்த சொற்றரு பொருள்கொடு
வாத செற்ப விதண்டையு மேதுவு
மோது நால்வகை யுவமையுந் திகழ்தர
வருள்சேர் மாந்தர் வெருள்சே ராமல்
தற்கமும் விடையமுங் கற்க
நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே. 2

இந்நூல் இயற்றியருளிய உமாபதிசிவம், இந்நூற் காரணமுங் காலமும் தெரித்தருளியவாறு வருமாறு :-

சிவபெருமான், குழந்தைகளுக்கு அவ்வப்பருவங்களுக்குத் தக்க அறிவைப் புகட்டும் பெற்ரோர் போல, மாணுக்கர்கள் அறிவின் எல்லேகளுக்குத் தக்கவாறு அருளிய நூல்கள் எண்ணிறந்தன. அவை பலப்பல சமயங்கட்குரியன. ஒவ்வொரு சமயத்தாரும் தத்தங்கொள்கையே சிறந்ததென வாதிக்குங்காலே, அவை திருவருள்பெருத மக்கட்கு மயக்கம் விளேக்கும். அவை ஒருபுறம் இருப்ப, உட்சமயங்கள் ஆறும் தனித்தனி சிறப்புடையன. சைவத்திற்கே சிறப்பாக இறைவன் அருளிய அருள்நூல்களும் பலவே. அவையெல்லாம் ஆடகம், தமனியம் முதலிய வெவ்வேறு பெயர்பெற்ற பொன் ஒன்றேயாதல்போல, ஒரு தன்மையனவாய்ப் பதி பசு பாசம் விளக்குவனவே. இவ்வாகமங்களேக் கற்றுணர்ந்த ஆசிரியர்கள் எண்மர். சாலிவாகன சகாப்தம் 1235 ஆம் ஆண்டிலே, தில்லேயிலே ஆனித்திருவிழா ஆரும்நாள் தேர்மண்டபத்தில் வரிசையாயிருப்பவும், மாயாவாதி ஒரு புறம் இருப்ப, ஆசிரியர் மெய்கண்டாரருள்பெற்ற ஒருவர் அருகிலே வீற்றிருப்ப கதியடையக் கருதிய ஒருவன் வீட்டிற்கு நன்னெறி யாதென்று வினவ, மாயாவாதி தன் மதம் நாட்ட, அவனே மறுத்து எண்மருள் ஒருவர் தம்மதம் நாட்ட, அவர் கொள்கையைப் பிறர் மறுக்க, இவ்வாறே மாயாவாதியும் எண்மரும் இயற்றிய வாதத்தைக் கேட்ட ஆசிரியர் மெய்கண்டார் மாணவர் அவர்களது கொள்கையின் குற்றங்களேக்காட்டி, உண்மைதெரித்தருளிய முறையை உணர்த்துவான் பிரமாணப் பொருள் விளக்கம், பிறர் கொள்கை மறுத்துத் தம்மதம் நாட்டல், பிறர் கோள் மறுத்தல், ஏதுக்கூறல், உவமையால் விளக்கம் என்பன வற்றிற்கிணங்க அருள்சேர் மாந்தர்க்கு மருள் சேராமல் இந்நூலியற்றப்பட்டது.

# நூல்

## மாயாவாதி சங்கற்பம்

### பெத்தத்தியல்பு

(3) நவிற்றிய நிரையி னவித்தையி னேனுரை
நித்த னறிவன் சுத்த னகண்டித
னிருவி கற்பனிர்த் தத்துவ னிரஞ்சனன்
சொல்வகை யெவையுந் தொடராத் தூய்மணி
வரம்பில் வேதச் சிரந்தரு பரம்பொருள்
சத்தா யெவையுந் தானு யவித்தை
தொத்தா துயர்ந்த தொல்சுடர் மூவா
வின்ன தன்மைய னேக னநேகன்
கன்னற் பெருஞ்சுவை தன்னிற் பிறவாப்
பெற்றியி னிருந்து பொற்பணி யியல்பினின்
வான்வளி யனனீர் மண்மருந் தன்ன
மான தாது வாறைங் கோசத்
தொகுதி யாக்கைப் பகுதிய தொருபுடை
சுத்தி வெள்ளி யொத்தென மித்தையிற்
ருனென லாகுந் தன்மைத் துலூதையிற்
சின்னூற் றகைமையின் வேற்றுமை மரீஇய
தென்னப் பன்மைய தெனினிலை பழம்பூத்
தோனுர் வயிரந் தருத்தருந் தொன்மையின்
வானு ரந்திரை நுரைதரு வாய்மையிற்
கூடு மசித்தைச் சித்துத வாதெனி
னெற்பதர் பலாலத் திற்பரந் தருமிது
தன்னியல் பென்றும் விளையாட் டென்றும்

முன்னுள மறைகண் மொழிதலி னொருநூற்
பன்மணி நிலையும் பசுப்பா லெனவும்
பலவக னீரி லலர்கதி ரெனவுங்
கூவ லாழி குளஞ்சிறு குழிகால்
வாவி யாவையும் வருபுன லெனவு
மவ்வவற் றடங்கி யாடியு ணிழலெனத்
தோன்றி யாக்கைநற் காந்தத் திரும்பும்
கனவிற் றீங்குங் கங்குலிற் கயிறும்
புனலிற் றோன்றும் பேய்த்தேர்ச் செய்தியு
மன்ன துன்பி னன்னிறப் பளிங்கெனப்
பதினாற் கரணத் தொருமூன் றவத்தை
நாளு நாளு நயந்துறு மிருபயன்
றன்னிற் சாராத் தோன்மைத் தன்மை
தர்ப்பண நிழற்கட் குற்றிபாய்ந் தற்றே

### சீவன்முத்தியியல்பு

இவ்வியற் பந்தப் பௌவம தகல
விண்முத றந்த கொண்மூப் படலத்
திருளற வுதித்த காறக விவேகந்
தன்னிற் றோன்றிச் சாதக மனைத்தையு
மன்னகப் பிரிப்பு மடியிழை வாங்கலும்
போல ஞானம் பொய்யறக் கழீஇத்
தானே தானாய்த் தன்னிற் றன்னைத்
தானே கண்டு தன்னல முற்று
வசையி றத்துவ மசிபதத் தெளிவா
லகமே பிரம மாயின னெனவறிந்

தசல ஞுகிநற் சலம்சல மதியேனக்
கண்டிடும்

### பரமுத்தியியல்பு

........உடலம் விண்டகல் கடத்து
மங்குலஃ துடைதர வேங்குமாங் தகைத்தே
யிவ்வகை யுணர்ந்து சேய்தொழி லருத
மடவோர் தாமுங் கடஞ வியற்றுங்
கன்ம காண்டத் தோன்மைப் புரிவாற்
ஞேற்றிய வித்தை மேற்கடை யரணியி
லேழுங்தேரி யவற்றை விழுங்கிய தேன்னத்
தன்ஞெழிங் துள்ள தாஞ யழியு
மங்கிலே யன்றி யழிவறு முத்தி
யேயா தேன்றுதன் னியல்பை
மாயா வாதி வகுத்துரைத் தனனே. 3

### மாயாவாதி சங்கற்ப நிராகரணம்

**பிரமாண மறுப்பு :-**

### வேதம் சுயம்பன்று

(4) உரைதரு பிரம மோன்றேனு முரைக்கண்
வருபிர மாண மறையேனி லருமறை
யோன்றேன்ற தன்றி யிருபோரு ளுரைத்த
னன்றன் றபேத நாடிய போருளேற்
பேதமு மபேதமு மோத வேண்டா

பேத மேனினு மபேத மேனினும்
பேதா பேத மேனினு மமையுநின்
ஐயமி லுரையிற் பையவந் துளதாந்
திகழ்பிர மாண விகழ்வுமுண் டன்றிப்
பெத்தம் பேத முத்தி யபேதமே
லநவத் திதமா மவையிரு திறனு
மினியப் பழமொழி யிரண்டல வொன்றே
யன்றியும் பெத்தம் பேதத் தறைதலு
மொன்றிய முத்தி யபேதத் துரைத்தலும்
பழுதா மித்திறம் பதையா தாய்க

'பிரமம் ஒன்றேயுண்டு' என்ற கொள்கைக்குப் பிரமாணம் வேதம் என்றால், அவ்வேதம் சீவன், பரம் என்ற இரண்டு பொருள்களைப்பற்றிப் பேசுதல் எவ்வாறு பொருந்தும்? அவ்விருபொருளும் அபேதமாதலின், வேதம் அவற்றைப்பற்றிப் பேசியதென்னில், வேதம் அபேதமாத்திரமே பேசாது பேதத்தையும் பேசுவதற்குக் காரணம் யாது? வேதமானது, பேதம், அபேதம், பேதாபேதம் என்ற மூவகையாகப் பேசினாலும் எல்லாம் ஒன்றையே குறிக்கும் என்னில், வேதம் முரண்பாடுடையது என்பது முடியும். எனவே வேதப் பிரமாணத்தை நீயிகழ்ந்தவனாவாய். பெத்த நிலையில் பேதமும், முத்திநிலையில் அபேதமும் வேதங் கூறியது என்னில், மாறிக்கொண்டால் தவறு என்ன? என்ற வினாவிற்கு விடையிறுக்கும் வகையிலாது வரம்பில்லாது சொல்லுதலாகிய குற்றம் உனது பிரமாணத்திற்கு உண்டாம். அங்ஙனம் கூறுதல் பொருந்தாது. பெத்தத்திலேதான் பேதம் உண்டு. முத்தியிற் பேதங்கிடையாது என்னில், உண்மையிற் பேதமாயிருப்பது ஒருகாலத்திலும் அபேதமாகாதென்பதே ஆராய்ச்சியாற் புலனாம். நீ சொல்லுவது தவறென முடியும்.

........மற்று
எழுதா மறையேனு மிப்பிர மாண
மாருரை தானே யாயின தேலுன
தேக மநேக முறுமியம் பாமற்
சத்த ரூபங் தகாதேனில் வானத்
தோத்தோலி யுறமு மேனில்வறி துதியா
தன்றியும் பதமும் பாழியு மனைத்து
மின்றியோ ரோலியா யெழுந்திடு மதனுக்
கறிவில துருவில தறியா தறையா
தன்றியு மவ்வகை யகண்டித மதுவிது
வேன்றது குறிப்ப தேவ்வகை யாவு
மோன்றேனு முரையு மோழிந்தனை யன்றே
யருமறை பிரம வுரையேனி லதற்குத்
தந்த தாலு முதனவில் பொறியில
தேன்னிலோ ருடற்கண் மன்னிய வலகை
யறைந்தற் றேன்ப தார்சோல தமலத்
திறம்பேற் றின்றே சேய்தோர் பெயராற்
சுயம்பு வேன்றுல கியம்புமேன் றறி

இனி, வேதம் யாராலே சொல்லப்பட்டது? அது சுயம்பாக உள்ளது: ஒருவராலுஞ் சொல்லப்படவில்லையென்னில் நீ ஒரு பொருள்தான் உண்டென்று சொல்லுவதொழிந்து, பிரமம் ஒன்று, வேதம் ஒன்று ஆகப் பல பொருள் உண்டென்று கூறினாயாவை. மேலும், வேதம் சத்தவடிவானது; ஒருவன் உச்சரியாமல் சத்தம் உண்டாவதில்லை. ஆகாயத்திலே சத்தம் தானாக உண்டாகிறது என்னில், அங்கே காற்றைத் துணையாகக்கொண்டே ஓசை தோன்றுவதன்றித் தானாகத் தோன்றுவதில்லை. அன்றியும், சொல், சொல்லமைப்பு, வாக்கியம் முதலிய வேறுபாடுகளில்லாமல் ஆகா

யத்தில் ஓசை உண்டாகிறது. வேதவொலி அத்தகையதல்ல. மேலும் வானில் எழும் ஓசை அறிவற்றது. வேதம் அறிவைப் பிறப்பிக்கும் ஒலிவடிவாயது. ஆதலால் வேதவொலிக்கு ஆகாய ஓசை உவமையாகாது. உடம்பு வேதவொலியைத் தோற்றுவிப்பதெனில், உடம்பிற்கு அறிவில்லாமையால் அது வேதப்பொருளையறியவுஞ் சொல்லவும் இயலாத தொன்று. சுட்டறியப்படாத பிரமத்தில் அது உண்டாயிற் றென்னில், அது இது என்று பொருள்களை வேதத்திற் சுட்டிக் கூறுமுறை அகண்டப் பொருளுக்கியலாமையால், அகண்டத்தில் வேதம் எவ்வாறு உதிக்கவல்லது? பிரமம் அதைக்கூறியதென்னில், பிரமத்திற்குப் பல், நாவு முதலியன கிடையா. பேய் ஒருடம்பைப் பொருந்திநின்று பேசுதல் போலப் பிரமமும் ஒருவருடலைப் பொருந்திநின்று வேதத் தைக் கூறுமென்னில், சாரப்பட்டவருடைய வாக்காக வேதம் வருதலாலே, அது பிரம வாக்கியம் என்றறிவது எப்படி? அது பசுவாக்கியமாயின், குற்றமற்றதாகாது. வேதத்தைச் சுயம்புவென்பதற்குக் காரணம், அது தானாக உள்ள இறை வனாலியற்றப்பட்டமையே என்க.

........இனித்

தற்கீட் டலைவரைத் தான்றேழு துரைக்குஞ்
சோற்கேற் புரவல னேவ லமைச்சரை
யடிகண் மற்றெங் குடிமுழு தாண்மினேன்
றேத்தி யிறைஞ்சிக் காப்பர்க ளேன்றுங்
கீச ஞுஞ்சேயப் பேசின னன்றி
யினையவை பிறரிற் கனவினு மிலனே
தன்னைத் துதிக்குஞ் சோன்னலங் தானுமத்
துறையறி வாணர்க் கறைவதோன் றன்றியுந்
தனக்குத் தானே தன்னலம் பகரா
தசத்துக் குரையா தார்க்குரை யுயிர்க்கேனி

லுரைபிர மாண மிறைபிர மேய
நீபிர மாதா நின்பிர மிதியென
நால்வகை யுளதுன தேகநன் றன்றே
நற்பிர மாண நிற்பதோன் றன்று
லப்பிர மேயமு மதனியல் பன்றே

அங்ஙனமாயின், வேதத்தையோதிய முதல்வன், தனக்குக் கீழ்ப்பட்ட தெய்வங்களைத் தொழுது கூறிய சொற்கள் வேதத்துட் காணப்படுதல் எதனாலெனின், அரசனது குடிகள் அமைச்சர் முதலிய அதிகாரிகளை வழிபட்டுக் காரியம் நடத்திக்கொள்வதுபோல நாமும் இறைவனுக்குக் கீழ்ப்பட்ட அதிகாரத்தெய்வங்களை வழிபடு முறையை இறைவன் அத்தகைய சொற்களால் அறிவுறுத்தினன் என்றறிக. இறைவன் பிறரைத் துதிப்பது கனவிலுங் கிடையாது. அவன் தன்னை வேதத்துள் துதித்தல் எவ்வாறெனில், பக்குவப்பட்டவர்களுக்குத் தன்னை வழிபடும் முறையை அது காட்டினதாகும் என்றறிக. மேலும், இறைவன் தன்னைப்பற்றித் தனக்குச் சொல்லவேண்டியதில்லை. உடம்பிற்குச் சொல்லுதல் பயனிலாதது. ஆதலால் பிறருக்காகவே அவன் தன்பெருமையை விளக்கினன் என்பது முடியும். முடியவே, நூலளவை, முதல்வனாகிய அறியப்படுபொருள், உயிராகிய அறிபொருள், உயிர் அறிவாகிய கருவியெனப்பொருள் நான்காதல் பெறப்படும். படவே, நீ பொருள் ஒன்றேயுண்டென்றது நிலைபெறாது. இதனால் வேதம் ஒன்றுதான் உள்ளது; பிரமம் ஒன்றுதான் உள்ளது என்ற கொள்கைகள் நில்லாதொழியும்.

**பிரமேய மறுப்பு :-**

**பிரமம் பிரமேயமன்று**

கன்னற் சுவையி லங்கிய மிலதா
லினிமை தோன்றாத் தனிமைத் தேன்றனை

யறிவிற் குவமை யசத்தாங் கட்டி
பிறிவித் தோட்டினும் பேற துருதே

இனி, கரும்பின்சுவை கரும்புக்கு வேறாக இருப்பதில்லை. அதுபோல, பிரமமும் தன் ஆனந்தத்தைத் தனக்கு வேறாக உணர்வதில்லையென்றாய். சுவையிழப்பையும் சுவையமைவையும் பகுத்தறியமுடியாத சடப்பொருளை அறிவுப் பொருளாகிய பிரமத்திற்கு எவ்வாறு உவமை கூறுதல் பொருந்தும்?

தற்பர விரிவு பொற்பணி தருமேனிற்
செய்வோ ரின்றிச் செய்வினை யின்மையிற்
பொன்பணி யாகை தன்பணி யன்றே
செய்வோர் போலாச் செயப்படு பொருண்முதற்
செய்வோ ரேயாச் செய்யவும் படுமே
சுத்தி வெள்ளியிற் றோன்றிற் றாயினுஞ்
சத்துல கேதுந் தாரா தருமேனி
னுலக மித்தையென் றோரா துரைத்தனை
நிலவுநின் மரபு நினைந்திலை யாங்கோல்

பிரமம் உலகமாகக் காரியப்படுவது பொன்பணியானாற் போல என்னில், பொன்தானே பணியாகாது. அதுபோல பிரமமும் தானே உலகமாகாதென்பதுமுடியும். செய்வோரைப்போலச் செய்யப்படுகின்ற பொருள் இருக்கமாட்டாது. குயவனைப்போலப் பாண்டங்கள் இருப்பதில்லையென்னில், பாண்டங்களுக்குமுதற்காரணம் மண் ஆகுமேயன்றிக் குயவனில்லை. அதுபோல உலகிற்கு முதற்காரணம் பிரமத்திற்கு வேறாக உண்டென்பது கருதப்படும். அந்த முதற்காரணமே உலகத் தோற்றத்திற்குப் போதும். முதல்வன் வேண்டியதில்லை யென்னில், செய்வோரில்லாமல் எப்பொருளும்

செய்யப்படுவதில்லையென்னும் உண்மைக்கு நீ கூறுவது முரணும். சிப்பி வெள்ளியாகத் தோன்றுவதுபோல உலகம் தோற்றமாத்திரம் உடையதேயென்னில், அப்போதுஉலகப் படைப்பைப்பற்றிப் பேசவேண்டியதில்லை. பிரமமான சத்து உலகமாயிற்றென்றலும் பொருந்தாது. பிரமம் உலகமா யிற்று, அல்லது உலகைத்தோற்றுவித்ததென்று நீ கூறுவா யாளுல், உலகம் பொய்த்தோற்றமே (மித்தை) என்று நீ கூறுவது பொருந்தாது. உன்சம்பிரதாயத்தை நீ மறந்தவ ருதல் வேண்டும்.

விவகா ரத்தில் வேண்டுது முலகம்
பரமார்த் தத்திற் பகரா மேன்னிற்
பரத்துள தேலிவை யும்பர மார்த்தம்
பரத்தில தேலொழி முன்பகர் மாற்ற
மதன்முத லிதுவென வுதவுக

பிரமம் உபாதிகள் வசப்பட்டுத் தன்னைச் சீவனென்று கருதிநிற்கும் விவகார நிலையில் உலகம் உள்ளதே; பிரமம் தன்னைப் பிரமம் என்றறிந்த பாரமார்த்த நிலையில் உலகம் இல்லதே என்னில், பாரமார்த்தமாயுள்ள பிரமத்தில் உண்டாகிய உலகமும் பாரமார்த்தமாகவேண்டும். அன்றெனில் உலகம் பிரமத்தில் தோன்றியதென்பதை நீ ஒழித்து விடவேண்டும். விட்டால் உலகம் எதன்கணின்று தோன்றியது என்று நீ காட்டவேண்டும்.

......அன்றியும்

விவகரிக் குங்காற் றிகழ்பர மார்த்த
நிலையது தெரியி னிதுநீ யேற்
றெரியா தாயி னஃதுந் தெரியா
துரையா ரளவையு மொழிந்தனை யன்றே
யளவை காண்டல் கருத லுரையென

வுளதவை மூன்றின் மொழிவழி நுழையி
னின்பிர மேய மென்ப தெனுங்கொல்

இனி, பாரமார்த்த நிலையிலுள்ள பிரமம் நீயென்பது உன்மதம். நீ பிரமமானால், உபாதிகளினாலே நீ அறியாமை யுறுகின்றாய். ஆதலால், பிரமமும் அறியாமையுடையதாக வேண்டும். பிரமமும் அத்தகையதேயென்று நீ சொன்னால், பிரமம் அறிவாயிருப்பதென்ற மறையுரையை நீ கைவிட்டவனாவை. மேலும் நீ காட்சி, கருதல், உரை என்னும் பிரமாணங்களாற் பொருள்களை அறிவதுபோலப் பிரமமும் அவைகளாற் பொருளையறியும் என்பது முடியும். முடியவே பிரமம் வாக்கு மனத்திற்கப்பாற்பட்டது என்ற கொள்கை எவ்வாறு பொருந்தும்?

**பிரமிதி மறுப்பு :-**

பொற்பிதிர் பிதிர்ந்தும் பொன்னே யாகின்
றற்பர மசித்தைத் தருமா றென்னெனிற்
சிலம்பி நூறரு நலம்போற் றோன்று
மென்றனை யதுவ தன்றொழி லன்றியு
மொன்றத னியல்புல கோரியல் பன்றெனப்
பலமிலை பழம்பூப் பாதவந் தருநீர்
திரைநுரை திவலை சிலதரு மிவைபோற்
றானே பலவா மெனநீ சாற்றினை
சத்தசத் தாகவுஞ் சத்தினி லசத்தின்
கோத்துள தாகவுங் கூறின ரிலரால்
வித்திலை கனிநனி விழுதா றருநெறி
சத்தல தோன்று தான்றர வேண்டு
நெற்பதர் பலாலத் திற்குபா தானமென்

**காரண மின்றிக் காரியம் பிறவா**
**பாரிடை யோருபடம் பண்ணவும் படுமே**

இனி, பொன்பணியான இடத்து, பணியிலே பொன் னின்மாற்று ஒருபடித்தாய் நிற்பதுபோல, பிரமம் உலக மானவிடத்து, உலகத்தில் பிரமத்தன்மை எவ்வாறு நிலை பெறுமென்னில், அது சித்தாகிய சிலந்திப்பூச்சி சடமா யுள்ள நூலைத் தன்னில் உண்டாக்கியதுபோல, சித்தாகிய பிரமம் சடமாய உலகைத் தன்னிற்றோற்றுவித்ததென்றாய். சிலந்தியின் றொழில் நூலைத் தோற்றுவித்தலே. அது அந்நூலை ஒடுக்குவதில்லை. உலகம் ஒருகாற்றோன்றி யொரு காலொடுங்குதலின் பிரமம் தோற்றுவித்தலை மாத்திரஞ் செய்வதில்லையாகலின், சிலந்தியுவமை பொருத்தமற்றதா கும். பிரமம் ஒரு தன்மையாயிருக்க, பிரமத்திறைற்றோன்றிய உலகம் பல்வேறு தன்மையதாயிருப்பானேன் என்னில், ஒரு மரத்திற்றோன்றிய பூ, இலை, காய், பழம் என்பன வெவ்வேறியல்பினவாதலும், நீரில் திவலை நுரை, திரை, குமிழி வெவ்வேறு வடிவினவாதலும் போலல்வது அது என்றாய். அவைகள் சடத்தினின்று சடப்பொருள் விகற்பங் கள் தோன்றுதற்குதாரணமாவனவன்றி, சித்தினின்று சட விகற்பங்கள் தோன்றுதற்கு உவமையாகமாட்டா. வித்தில் நின்று இலை, பழம், விழுது முதலியனவுடைய ஆலமரம் தோன்றிறைற்போல, ஒரு நுட்பமான சடமூலத்தினின்றே உலகம் தோன்றியதென்று அறியத்தக்கது. நெல்லிலே வைக்கோலும் பதரும் தோன்றிறைற்போலச் சித்தினிட மிருந்து சட உலகந் தோன்றுமென்பதும் பொருந்தாது. ஏனெனில் நெல்லுஞ் சடம், வைக்கோல், பதர் முதலியனவும் சடம். சடநுட்பத்தில் நின்று வெளிப்படையான சடப் பொருள் தோன்றுவதியற்கை. ஒருகாரியம் தோன்றுவதற்கு அதனோடு ஒத்த இயல்புடைய காரணம் வேண்டப்படும்.

அஃதில்லையானால், மண்ணில்நின்று பருத்தி ஆடை நெய்யப்படவேண்டும்.

அந்தமில் பிரம மவித்தைகா ரணமெனத்
தந்தனை யவித்தை தானெய் துறுதல்
தன்னியல் பென்னில் வன்னிதன் வெம்மையிற்
சத்தின தியல்புஞ் சத்தே யசத்தெனில்
வைத்தத னியல்பெனும் வழக்கொழி யன்றியு
மிருள்போதி விளக்கென வருமரு விளக்கிற்
கருமை பயாஅத பெருகொளி தகுமெனிற்
றன்னியல் பன்றத னுபாதி வசத்தான்
மன்னிய தன்றிமை தான்றனின் மாயா
தோன்றா னசுத்த ணன்றா மன்றே
யாங்கொரு காலத் தோங்கிய தாயி
னந்தமி லவித்தை வந்தணை வதற்கோ
ரேது வேண்டும் புயலியல் பெனின்வீ
டோத வேண்டா வொழிந்தோ ரினுமுறும்

எல்லையற்ற பிரமம் அவித்தையோடு சேர்தலே உலகத் தோற்றத்திற்குக் காரணமெனில், சித்தாகிய பிரமம் அவித்தையோடு கூடுதற்குக் காரணம் வேண்டும். அது பிரமத்தினியல்பென்னில், நெருப்புக்குச் சூடு இயற்கையானாற்போல, பிரமத்தின் இயற்கையிற்றோன்றும் உலகமும் பிரமம்போலச் சத்துப்பொருளாய் நிலைமாறாதிருக்கவேண்டும். உலகம் நிலையில்லாததேயென்னில் அது பிரம இயற்கையிலுதித்ததென்ற கொள்கையை விட்டொழிக. சித்தாகிய பிரமத்திற்குச் சடமாகிய உலகம் இயல்பென்பது விளக்கு ஒளிக்கு அதனைச் சூழ்கின்ற இருள் இயல்பென்பது போலாம்; பெரிய விளக்கில் கறுத்த மை உண்டாவது போலப் பிரமத்தில்நின்று உலகம் தோன்றும் என்னில்,

ஒளியில்நின்று மைதோன்றுவது இல்லை. ஒளிக்கு இடமான நெய், திரி முதலியவற்றில் நின்றே மைதோன்றும். உலகம் பிரமத்தில் ஒடுங்குவதுபோல, மையானது ஒளியில் ஒடுங்குவதில்லை. மேலும் சுத்தமான பிரமம் அசுத்தமான அவித்தையைச்சாரக் காரணம் வேண்டும். பிரமம் இருந்தவாறிருக்க அதனை மாயா உபாதிகள் சென்றடைகின்றனவென்னில், அவை பிரமத்தைச் சேர்தற்கு ஏது என்னை? ஆகாயத்தில் மேகங்கள் வந்து பொருந்தல் இயற்கையாதல்போல் என்னில், இயற்கையாக அவை மீட்டுமீட்டும்வந்து பொருந்துமாகலின், நிலையான முத்தி உண்டென்று பேச இடமில்லை. உபாதிகள் நீங்கப்பெற்றவர்களிடத்தும் அவை மீளவும் வந்தடையும்.

களங்கம ஃதுறவுறு மவித்தைதற் கவித்தல்
விளங்கிய பிரம விளையாட் டாயி
னவித்தை யென்பதோன் றன்னியந் தன்னி
லுதிக்கு மென்றமுன் னுரையு மறந்தனை
நுண்ணூற் குடம்பை நுந்துழி போலுட்
படுநெறி யதனால் விடுநெறி யிலதாற்
றலைமையு மறிவு மிலதென வித்தையை
விடுத்தெடுத் தாணரும் வேற்றோ ரன்றே
யொளிகோ டாமிரங் குளிகைபெற் றாங்கத
னவித்தையை வித்தை தவிர்க்குமென் றுரைக்கி
னித்த னறிவன் சுத்தனென் றுரைத்த
வித்தக மென்னீ வித்தையும் வேறான்
றெம்ம னோரி லொருவ னின்னிறை
யம்ம சைவந் தவனீ யன்றே

மாயா உபாதிகளைப் பொருந்துதல் பிரமத்தின் விளையாட்டு என்னில், விளையாட்டுப்பொருள் விளையாடுபவனுக்கு

வேறாதல்போல, மாயா உபாதிகள் பிரமத்துக்கு வேறாக உள்ளனவாகும். அவ்வாறாயின் அவை பிரமத்திற்றோன்றும் என்று கூறிய கொள்கையை நீ மறந்தவனாக வேண்டும். அல்லது உலண்டு தான் நூற்ற நூற்கூட்டிற் சிக்கி வெளியே வரவியலாமைபோல நீ கூறுகின்ற பிரமமும் மாயா உபாதிகளுட்பட்டு வெளிவர இயலாது தலைமையும் அறிவும் இழந்ததென்று சொல்வாயாக. அவ்வாறாயின் மாயாபந்தத்துள் அகப்பட்ட பிரமத்தை அதன்கண் நின்றெடுத்தாட்கொள்ளும் ஆற்றலுடையவர் அப்பிரமத்தின் வேறாவரென்பது முடியும். தாமிரத்தின் களிம்பை அதனோடு சேருங் குளிகை நீக்கினாற்போலப் பிரமத்தின் சிறந்த அறிவானது அதன் உபாதியைப்போக்குமென்னில், உபாதியுட்படும் பிரமத்தைச் சத்துத் தன்மையும் தூய்மையும் அறிவும் உடையதென்று நீ முன்கூறியது எவ்வாறு பொருந்தும்? மேலும் செம்பிற்கு வேறாகிய குளிகைபோலப் பிரமத்துக்கு வேறாகவே சிறந்த ஞானம் வந்து கூடும் என்று சொல்லவேண்டும். அவ்வாறாயின் நம்மைப்போல ஒருவனே நீ கூறும் பிரமம் என்று சொல்லவேண்டும். அப்படியானால் சைவக் கொள்கையை மிகுதியும் நீ உடையாய் என்பது முடியும்.

**பிரமாதா மறுப்பு :-**

**பெத்தம்**

பன்மணி பசுநற் பாத்திர மெனவு
நன்னூல் பானீர் நற்கதி ரெனவு
முடலையு முணர்வையு முவமித் தனையேற்
றடமணி சரடோடு தாங்கூ டலவே
யுணர்வுணர் வொழியி னுலகுணர் வுறினின்
பாலும் பசுவுஞ் சாலுஞ் சாலக்

கலம்பல வன்றிச் சலம்பல விலதெனக்
காணுந ரின்றி வீணின் விளம்பினை

இனி, பலவகை மணிகளினூடுசென்று அவற்றைக் கோத்துநிற்கும் நூல் ஒன்றானாற் போலவும், பலநிறப் பசுக்களின் பால் ஒருதன்மையாதல் போலவும், பல தண்ணீர்ப் பாத்திரங்களிற் காணப்படுங் கதிரவன் கதிர் ஒன்றாதல் போலவும், பல நீர்நிலையிலுள்ள நீர் ஒன்றேயாதல் போலவும் உடல்களும் உணர்வும் ஆவனவென்று நீ கூறினாய். பலவகை மணிகளும் சரடும் தாமாகக்கூடவில்லை. அவற்றை ஒருவன் கோத்தாற்போல, உன்னுடையபிரமத்தையும் உடல்களையும் பொருத்தினவன் வேறொருவனாதல்வேண்டும். பால் அறிவிலாததுபோலப் பிரமம் அறிவிலாததாயும் பசுக்கள் அறிவுடையனபோல, உடல் முதலியவைகள் அறிவுடையனவாகவும் இருந்தால் நீ சொன்ன பாலும் பசுவும் என்ற உவமையொக்கும். பாத்திரங்களிற் பின்னம் ஏற்பட்டாலும் நீரிற் பின்னமில்லையென்று நீ கண்டு சொல்லுவதுபோல, பிரமத்தையும் உடலையும் வெவ்வேறாகக்கண்டுசொல்லுபவர் இல்லாதபோது, நீ கூறும் உவமையாற் பயன் என்?

ஆடியு ணிழல்போற் கூடுதல் கூறிற்
றன்னிழல் கோண்டு தற்பணஞ் சலிக்கின்
மன்னிழல் கோண்டுடல் வந்தகன் றிடுமே

கண்ணாடியில் நிழல்படுதல்போல, உடம்பில் பிரமம் பிரதிபலிக்குமென்னில், கண்ணாடியிற்படும் நிழலினாற் கண்ணாடி அசைவுறுவதாயின், பிரமத்தின் நிழல் காரணமாக உடம்பு வந்துபோதல் பொருந்தும். நிழலாற் கண்ணாடி சலிப்பதில்லை. ஆதலால் அவ்வுவமை பொருந்தாது.

மன்அயக் காந்த மேன்னவுடல் பிரம
சன்னிதி யளவிற் சலித்திடு மாயி

ணகண்டிதன் சன்னிதி யலதில தேவையு
நடந்திட வேண்டுங் கிடந்திடப் பெருவே
காந்தத் திரும்பு காட்டுநர்ப் பெறிலயஞ்
சேர்ந்திடு நீக்குஞ் செயலதற் கிலதே

இனி, காந்தத்தின் முன்பாக இரும்பு தொழிற்படுதல் போல, பிரமத்தின் சந்நிதியில் உடம்பு தொழிற்படும் என்னில், பிரமம் அகண்டாகாரமாய் இருத்தலின் அதன் சந்நிதியிலுள்ள அறிவுடைப் பொருள், அறிவில் பொருள் ஆகிய எல்லாம் ஒருங்கு தொழிற்படவேண்டும். ஆனால் உடல்கள் தொழிற்படுவதுபோலக் குடம், ஆடை முதலியன தொழிற்படாமை காண்க. மேலும், காந்தத்தையும் இரும்பையும் ஒருவன் நேர்முகப்படுத்திய காலத்திற்றான், இரும்பு காந்தத்தைச் சேர்ந்திடும் ஆதலின், பிரமத்தையும் உடலையும் இணைத்துக் காரியப்படுத்த ஒருவன் வேண்டுமென்பது முடியும். காந்தம் இரும்பைத் தன்பால் இழுப்பதேயன்றி விலக்க ஆற்றலுடையதன்று. பிரமத்தின் சந்நிதியில் உடல் கூடியும் பிரிந்துமியல்வதால், நீ சொன்ன உவமை பொருந்தாது.

கனுத்துயர் கயிற்றர வேனுச்சில தொடுத்தனை
கனவின் பயனும் நனவின் பயனும்
வினையின் பயனவை பொய்யென வேண்டா
வுடன்மா றுட்டக் கடனது கருதுக
வுற்ற புற்று மற்றதிற் கயிறு
முடலுங் கூடச் சடமென வறிதி
யறிவு கயிறென் றறியா தன்றே
யச்சம தடைதல் கோச்சமை யுடைத்தே
யின்னுமக் கனவி லிருளுறு கயிற்றிற்
பின்னுநின் பிரமம் பிரமித் திடுமே.

இனி, கனவில் துயரமுடையவன் விழித்தபோது, அத் துயரத்தைப் பொய்யாகக்கண்டது போலவும், புற்றினருகே கிடந்த கயிறு இருளிற் பாம்பெனத்தோன்றியது போலவும், துன்பங்கள் பிரமத்திற்குத் தோற்றமாவனவன்றி உண்மை யிலில்லை என்பாய். கனவில் அனுபவிப்பதும் நனவில் அனுபவிப்பதும் வினையின் பயன்களே. அவை நிலையிலா திருத்தல் பற்றி அவை பொய்யென்று கூற இடமில்லை. நனவில் தூலவுடம்பினுல் வினைப்பயனை நுகரும் உயிர், கனவில் நுண்ணுடம்புகொண்டு அதனை அனுபவிக்கும் என்றறிக. மேலும், அறிவாகிய பிரமம், கயிற்றைக் கயிறென் றறியாது பாம்பென்று மயங்குதற்குக் காரணம் யாது? அத்தகைய பிரமத்தை முதல்வன் என்பதெப்படி? மேலும் கனவிற் காணப்படுவது பொய்யென்றும், கயிறு அஞ்சத் தக்கதன்றென்றும் தெரிந்திருந்தும், கனவு கண்டாலும் இருளிற் போனுலும் அச்சமடையும் பிரமம் எத்தன்மையது? அங்ஙனம் மயங்குவதொன்றைப் பிரமம் என்பது எப்படி?

துன்னிய வினையிற் செம்மலர்ப் பளிங்கெனத்
தானுந் தகைமை யானுன் மலரென
வோருபய னன்றிப் பலபயன் மரீஇய
திருவினை தருபய னெனநனி வேண்டி
லாண்ட வித்தையு மவித்தைகோ டாக்கையு
மீண்டிரு வினையு மியம்பினை பரத்தைக்
கன்வரைப் பிணிக்குங் காவல ரெனமுய
ருேல்வினைத் தோட்கிற் ருேன்றுடற் சிறையிட்
டிருவினை யூட்டு மெம்மா னம்மான்

சிவந்தபூவொடு சேர்ந்த பளிங்கு செந்நிறம் காட்டினு லும் தன்றன்மையை இழவாமைபோல, பிரமமும் வினையை நுகர்ந்தாலும், தன்றன்மை மாருதிருக்குமென்னில், வினைப் பயன்கள் பலவாதலால், பிரமமும் புண்ணிய பாவங்கள்

முதலியவற்றை அனுபவிக்கவேண்டுமென்பது முடியும். அங்ஙனமாயின், பிரமத்திற்கு அறியாமையும், இருவினையும், அவற்றின் காரணமாக உடம்புங் கூறியவாறாகும். இங்ஙனமாயின், கள்வரைப்பிடித்துச் சிறைசெய்வதற்கு அரசன் ஆணை இருப்பதுபோல, இருவினைப்பயனை ஊட்டுவதற்கு இறைவன் வேண்டுமென்பது முடியும்.

அருவினை யுடற்க ணவத்தைக ளுரைத்தனை
யாருறு பவர்பர மகண்டித மடங்கா
தோர்வில துடல்சட முறுநெறி யாதெனின்
மன்னிய கரண மாறாட் டத்திற்
பன்னின மென்னி னிவையோ பரமோ
முதலிய தாயி னிவைபிறழ் வெய்தா
திவையெனி லுனது மொழிபழு துளதே

உடலில் மூன்று வகையான அவத்தைகள் ஏற்படுமென்றாய். அவற்றையனுபவிப்பது யார்? பரப்பிரமம் அளவற்றதாகலின், அது உடம்பிற் கட்டுண்டு அவத்தைப் படுவதற்கிடமில்லை. உடல் சடமாயிருப்பதால் உடல் அவத்தைப்படும் என்று சொல்வதற்கிடமில்லை. அந்தக்கரணங்கள் பிரிந்த இடத்துண்டாகிய மயக்கமே அவத்தை யெனப்படும் என்றால், உடம்பில் முதன்மை பெற்றிருப்பது, அந்தக்கரணங்களோ? பரப்பிரமமோ? பரப்பிரமம் முதன்மை பெற்றிருந்தால், அவ்வறிவுடைப்பொருள்முன், அந்தக்கரணங்கள் மாறாட்டம் அடைதற்கிடனில்லை; அதனால் அவத்தைகள் நிகழமாட்டா. உடம்பில் முதன்மை யுடையன அந்தக்கரணங்களே என்னில், பரப்பிரமத்தின் சந்நிதியில் உடலியங்குவதென்று நீ சொல்லியது தவறாகும்.

உடற்படு பிரம முறுமேனிற் சாளரத்
தீடத்தகு முறுவிர னுதியளி யேறிதுய
ரங்குலி தானே யருந்திடி லுடற்கட்
டங்கிய வறிவு தனித்துறு மன்றே

உடலில் அகப்பட்டுநிற்கும் பிரமமே அவத்தைப்படு மென்னில், அவ்வாறு பிரமம் கண்டிதப்பட்டு நிற்குமா? பலகணிவழியாக நீட்டிய விரலில் ஒரு வண்டு கொட்டினால் அதனால் உண்டாகிய கடுப்பு நீட்டியபகுதியளவிலே நின்று விடுமானால் நீ சொல்லியது பொருந்தும். அப்படியன்றிக் கடுப்பு உடம்பு முற்றிலும் பரவுதலின், உடலிற்படும் அவத்தை பிரமமுழுதும் பரவுதல் வேண்டும். அங்ஙன மாயின், உடலிற் பொருந்தும் பிரமமே அவத்தையுறும் என்று நீ கூறுதல் பொருந்தாது.

தற்பண நிழற்கட் குற்றிபாய்ந் தற்றா
ணற்கணிற் றுயர நணுகாத் தகைத்தேனி
னின்மொழி விரோதமுங் காட்சி விரோதத்
தன்மையு முறுமவை தவறில வாகா
யாமுடைப் பதிவகை யாவரும் பலகலை
சொல்லுத லெளிதரி தத்தொழில் புரிவெனப்
புல்லிய பழமொழி புதுக்கினை யன்றே
யகண்டித மெனநீ பகர்ந்தமை தனக்குப்
பந்த மிதுவெனத் தந்தமை கருதில்
வானி னடக்குங் காலினைப் பிடித்துப்
பருவிலங் கிட்ட வொருவனீ யன்றே

கண்ணாடியிற் பிரதிபலித்த வடிவத்தின்கண்ணில் ஒரு குச்சியைக்கொண்டு குத்தினால் கண்ணாடிக்குக் கேடுவருமே யொழிய, உண்மைக் கண்ணிற்குக் கேடுவாராமைபோல,

உடம்பிற் பிரதிபலிக்கும் பிரமத்தின் பிம்பத்திற்குவருஞ் சுகதுக்கங்கள் உடற்கே ஏற்படுவன அன்றிப் பிரமத்திற் கில்லையென்னில், முன்னே சுகதுக்கங்களை அறிவு அனுப விப்பதென்று நீ சொன்னதற்கு மாருக, இப்பொழுது, உடலே அவற்றை அனுபவிக்கும் என்கின்ருய். அதுவன்றி யும், அறிவே சுகதுக்கங்களை அனுபவிப்பது காட்சிப் பிரமா ணத்தால் அறியப்படும். அதற்கு மாருக, உடம்பு அனுப விக்கும் என்று நீ கூறுதல் சுருதிக்கும், அனுபவத்திற்கும் விரோதமானதால் அது முற்றிலும் தவருகும். "சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லியவண்ணஞ் செயல்" என்னுந் திருக்குறளை நீ புதுக்கிஞயாகல் வேண்டும். அளவுகடந்த பரப்பிரமத்திற்கு நீ மாயாவுபாதிகள் உண் டென்பது. ஆகாயத்தில் வீசுங் காற்றினைப் பிடித்து, அதற்கு விலங்கிட்டதுபோலும்.

**சீவன்முத்தி மறுப்பு :-**

பந்தம தகல வுந்து விவேகம்
வான்வளி யெனத்தனிற் ருனே தோன்றின்
முன்புள தாயின் மயங்கா திலதேனிற்
பின்புள தாகா திலதுள தேனின்வெளி
மலரது தருமனல் மரக்கணின் ருகித்
தருவது தகுமேனிற் ருனே தோன்ரு
விறகி னுதித்த கனறகு மாயி
னவித்தையி னுதித்த வித்தை யம்மரத்
துதித்த விவேகம் வித்தையென் றுரைத்த
வெங்தழ லனைய விவேக முதித்த
திந்தன மனைய திறையிலன் றற்றே

இனி. சிறந்த அறிவால் பிரமத்திற்கு மாயாபந்தம் நீங்குதல் ஆகாயத்திலுள்ள மேகங்களை ஒருவகைக்காற்றுத்

தோன்றிச் சிதறடிப்பது போல்வதென்ருய். ஆகாயத்திலே காற்றிருப்பதுபோலப் பிரமத்திலேயே சிறந்த அறிவு முன்னமே இருக்குமாயின், இடையிலே மயக்கம் ஏற்படக் காரணமில்லை. அச்சிறந்த அறிவு, இடையிலே உண்டாவது என்னில், முன்னமேயில்லாதது பின்னே உண்டாகாது. இடையிலே அவ்வறிவு உண்டாகும் என்பது ஆகாயத்திலே முன்னில்லாத பூ பின் உண்டாயிற்றென்பதுபோலாம். விறகில் முன்னில்லாத நெருப்பு, அரணியிஞற் கடைந்தகாலை உண்டாவதுபோலப் பிரமத்தில் சிறந்த அறிவு தோன்றும் என்னில், அரணியை விறகில் வைத்துக் கடைவதால் நெருப்பு உண்டாவதுபோல, நீ கூறும் பிரமத்திலும் வேருெருவன் ஞானத்தைத் தோற்றுவிக்கவேண்டும். தாஞக அது தோன்ருதென்பது முடியும். விறகில் தீ தோன்றுவது அவித்தையில் வித்தைதோன்றுவதற்குவமையாம் என்னில், ஞானந்தோன்றியது விறகுபோன்ற அவித்தையிலேதான் பிரமத்திலன்று என்பது முடியும்.

185 இற்படப் பிரிப்பின் மேய்ப்படு மேவற்றையு
மிதுவன் றிதுவன் றெனக்கழி காலை
யதுவே தானே யாயின தென்றனே

இனி, ஒரு வைக்கோல் வேய்ந்த வீட்டின் வைக்கோல், கழி முதலிய அதன் உறுப்புகளெல்லாவற்றையும் பிடுங்கிக் களைந்தால், வீடென்பது இல்லையாதல் போலவும், ஒரு சீலையிலுள்ள ஒவ்வோர் இழையையும் பிரித்தெறிந்தால் சீலையென்பதில்லையாஞற் போலவும், எல்லா உபாதிகளையும் இது நான் அல்லேன். இது நான் அல்லேன் என்று கழித்தால், பிரமந்தானே சீவனுயிருந்ததென்பது விளங்கும் என்ருய்.

வித்தை முன்ன ரவித்தையு மவித்தைமுன்
வித்தையு மில்லா வீயஞ்ஞெளி யிருளென

விருளல வொளிக்கு மொளியல விருட்கு
மொருகா லத்து மொருபய னிலதா
லிரண்டையு நுகரு முரண்டரு விழியென
வித்தையு மவித்தையு முய்த்ததோன் றுளதே

அறிவாகிய பிரமத்தின்முன், அறியாமையாகிய உலகம் நில்லாது. அறியாமை நிலைத்தவிடத்து அறிவுவிளங்காது. அது சூரியனது ஒளிமுன் இருள் இல்லாததுபோலவென அறிக. இருளுக்கு ஒளியாற்பயனில்லை; ஒளிக்கு இருளாற் பயனில்லை. ஆதலால், உபாதிகளும் பிரமமும் ஓரிடத்திற் கலந்து இருப்பன எனவும், பிரமத்தைச்சார்ந்த உபாதிகளைப் பிரித்தவிடத்துப் பிரமஞ்ஞானம் விளங்கும் எனவுங் கூறுதல் பொருந்தாது. ஒளியோடுகூடி ஒளியையும் இருளோடுகூடி இருளையும் அனுபவித்து இரண்டுமாகாத கண் போல ஒன்றுளது. அறிவாகிய பதியோடு சேர்வதாகியும், அறியாமையுடைய பாசத்தோடு சேர்வதாகியுமுள்ள பசுவே அது என்றறிக.

தானே தானு மானாற் பயனென்
றன்னிற் றன்னைத் தானே காணிற்
கண்ணிற் கண்ணைக் காணவும் படுமே

பிரமத்தின் வேறாக ஒன்றில்லை; பிரமமே பிரமமாயிற் றென்னிற் பயன்யாது? பிரமம் தன்னிடத்திலே தன்னைக் காணுமாயின், அது கண்ணானது தன்னிடத்தில் தன்வடிவைக்காணும் என்பதுபோலும். கண் தன்னையே தன்னிற் காணாமைபோலப் பிரமம் தன்னிற்றன்னைக்காணாதென்பதே முடியும்.

தன்னல மதனைத் தானே நுகரு
மென்னின் முன்னல மெய்தா திருந்ததேன்

கட்டி போலெனக் கதறினை யின்பம்வந்
தொட்டிடும் வித்தை யுடையயா யிடினே

பிரமம் தன் ஆனந்தத்தைத் தானே அனுபவிக்கும் என்றாய்; பிரமம் உபாதிகளோடு கூடுமுன் தன் இன்பத்தைத் தான் நுகரவில்லையா? என்ற வினவிற்கு, கரும்பு தன் சுவையைத் தானறியாததுபோலப் பிரமமும் தன் நன்மையைத்தான் அறியவில்லை என்றாய். அதனோடு இது முரணுமல்லவா? உண்மையில், பிரமஞானத்தாற் பசுவாகிய உனக்கு முன்னில்லாத இன்பம் வந்தெய்தும் என்றறிக.

தத்துவ மசியென வைத்தமுப் பதத்திற்
கொன்றே பொருளென் றன்றே பகர்வது
நீபுலி யாயினை யென்றுங் குணரி
லாயினை யென்றது மாகுவ மைத்தா
னேயா யினமென லாயா யென்று
லகமே பிரம மாயின தென்றுற்
சகமே யறியத் தான்வே றன்றே

'அது நீ ஆகின்றாய்' என்ற மகாவாக்கியத்தின்கருத்து, பொருள் ஒன்றே என்பதன்று. நீ ஆற்றல்பற்றிப் புலியாயினையென்றால், நீ புலியே; புலியின்வேறாக நீ இல்லையென்பது கருத்தாகாது. அவ்வாக்கியத்தில் ஆயினையென்றது உவமையேகுறிப்பது. ஒருவன் நான் நோயாய்க்கிடந்தேன் என்றால், அவன் நோயின் வேறல்லன் என்பது கருத்தாகாது. நானே பிரமம் என்றால், பிரமத்தோடு இரண்டறக் கலந்து நான் அதனின் வேறலாது நிற்கின்றேன் என்பது கருத்து.

உண்மையிற் சலமில வுடற்சஞ் சலமுறும்
வெண்மதி போல விளங்கிடு மென்றனை

யசல னாகிச் சஞ்சல சலத்துச்
சலன மேவின மெனமதி காண
வேண்டும தன்றிக் காண்பவர் பிறரே
லீண்டுன தேக மென்செய்த தியம்புக

நமக்கு அசைவில்லை. உடம்பிற்கே அசைவுண்டு. நீரிற் காணுஞ் சந்திரனது பிரதிபிம்பம் நீரோடு அசைந்தாலும் சந்திரன் அவ்வாறு அசையாமைபோல என்றாய். தனக்கு அசைவில்லை என்று சந்திரன்தானே தெரிவதில்லை. சந்திரனையும், அதன் பிரதிபிம்பத்தையும் வேறொருவன் பார்த்தே அவற்றின் நிலைமை கூறுவதுபோல, உடற்கே அசைவு; பிரமத்திற்கசைவு இல்லையென்று அறிந்து சொல்பவன் பிரமத்திற்கு வேறாகவுளன் என்பதே முடியும். ஆதலால் பிரமம் ஒரு பொருள்தான் உளது என்பது தவறாகும்.

**பரமுத்தி மறுப்பு :-**

உடல்விடக் கடத்துட் படுவெளி போலெனில்
விட்டேன் பெறவுடற் பட்டேன் படமற்
றிகலற வோருவ னிவ்வகை தெளியி
லகிலமு முத்தி யடைந்திட வேண்டு
மறிந்தோர் முத்தி யடைந்தோ ராயின்
பிறிந்தோ ருயிர்பல பேதத் தன்றே

இனி, குடம் உடைந்தபோது குடத்திலுள்ள ஆகாயம், வெளி ஆகாயத்திற் கலப்பதுபோல, உடல்விட்ட பிரமம் அகண்டப்பிரமத்தோடு ஒன்றாகும் என்றாய். ஆகாயமானது குடத்திலுள்ளபோது ஒரு துன்பத்தையும் அனுபவிக்கவில்லை. வெளிப்போந்தபோது அஃது ஓர் இன்பத்தை நுகரவுமில்லை. உடலிலிருக்கும்போது துன்பமும், அதை

விட்டபோது இன்பமும் அடையும் பிரமத்திற்கு இவ்வுவமை பொருந்துவதில்லை. நான் பிரமமென்றபோது ஒருவனே எல்லா அறிவும் உடைய பிரமமாயின், அவ்வாறுணர்ந்த காலை உலகிலுள்ள எல்லாரும் முத்தி இன்பம் அடைய வேண்டும். அவ்வாறில்லையாதலின், அறிந்தோர், அறியாதார் என்ற இருவகைச் சீவான்மாக்கள் இருப்பன என்பது முடியும்.

### பிரமஞானம் வாராதென்றது

கன்ம காண்டங் காரண மாக
மன்னும் விவேக மென்னி லவித்தைக்
கேது காரண மோதினை யில்லை
யிதற்குங் காரணம் விதித்தல்வேண் டின்றே

கருமங்களைச் செய்வதாற் சிறந்த அறிவு உதிக்கும் என்னில், பிரமத்தை அவித்தைவந்து பொருந்துதற்கு ஏது நீயாதுங் கூறவில்லை. அதுபோலச் சிறந்த அறிவு உண்டாவதற்குச் சாதனமாகக் கருமங்கள் வேண்டுமென்பதில்லை. அறியாமை காரணமில்லாமல் வந்து பிரமத்தைப் பொருந்துவதுபோல, அறிவும் தானே உளதாம் என்றாற்போதுமே.

அரணியி லுதித்த கனலவை கவர்வேன
விரதத் துதித்த விவேக மழித்தல்
வருந்தி யாயினுந் திருந்திய வேத
நீதி யெல்லா நீத்துப் போதமொன்
றறியார் தாமு மவ்வழி நடத்தல்
போறியோ போத நெறியோ விதுபவ
நீங்கிடு நெறிதரு பாங்கினைப் பழித்த
னன்றி கொன்ற லன்றே யன்றியு

ஞால நீதியு நான்மறை நீதியும்
பாலருன் மத்தர் பசாசரி லேனவு
முறங்கி னோன்கை வேறும்பாக் கேனவுங்
தானே தவிரா தானுற் புரியா
தொழிந்திடி னிரயத் தழுந்துத றிடமே

சிறந்த பிரமஞானம் உண்டானபோது கருமங்கள் அழிவெய்தும் என்றாய். பிரமஞானம் பெறாமல் அதுபெற்றேம் என நினைந்து ஒழுக்கத்தைக் கைவிட்டு நடப்பவர்கள் அவ்வாறு நடப்பதற்குக் காரணம் அவர்கள் தலைவிதியோ, அறியாமையோ எனக் கூறுக. மனிதப்பிறப்பு எடுத்தபோது செய்யவேண்டிய கடமைகளை விட்டுவிடுவது நன்றிகொன்ற குற்றமாகும் அல்லவா? பிரமஞானம் இல்லாமலே, பாலர், பித்தர், குடியர், பேயர், துயில்வோர் முதலியவர்கள்போல் நடப்பது, கடமைத்தவறால்வரும் நரகத்துன்பத்தை நாடுவதாகும்.

உய்த்தோ னன்றி முத்தி யுரைத்தல்
பித்தோ பிரமஞ் சேத்தோ பெறுவ
துடலையு நீயே சடமேனச் சாற்றுனை
வையினும் வாழ்த்தினுங் கோய்யினுங் கோளுத்தினும்
வணங்கினு முதைப்பினும் பிணங்குதல் செய்யாப்
பிரமத் தன்மை பெறுவதேக் காலம்

பிரமஞானத்தைப் பெறுவது உயிர் வாழும்போதோ இறந்தபின்னோ? வைதாலும் வாழ்த்தினாலும் அடித்தாலும் அணைத்தாலும் ஒரு தன்மையாயிருக்கும் நிலை எப்போது உண்டாகும்?

இருக்கு நாள்சில வெண்ணினால் கதறித்
தருக்கம் பேசித் தலைபறி யுற்றுக்
கண்டோ ரீந்த பிண்டமுண் டலறிப்
பன்னோ யாக்கை தன்னோ யுற்றுடல்
விடவரு மென்று நடுநடு நடுங்கி
விட்டோர் தெய்வத் தோட்டின் றன்றியும்
யானே யெவரு மானே னென்றலி
னவ்வவர் சீறி யவ்வவர் வாணாட்
சேவ்விதி னிரயஞ் சேர்த்துவ ரதனால்
மாயா வாதப் பேயா வுனக்குத்
தேவரி லொருவருண் டாக
மேவரு நரகம் விடுத்தலோ வரிதே. 4

உடலுள்ளபோதே உய்திகூட முயலாமல், நானே பிரமம், நானே எல்லாத் தேவரும் ஆயினேன், நான் பிரம ஞானங்கற்பிக்கிறேன் என்று, வீண் விவகாரஞ்செய்து வயிற்றுப்பாட்டைப் பார்த்துக்கொண்டு திரியும் மாயாவாதியே, நீ உனது சின்னாள் வாழ்வின் முடிவில் உன்னைக் காப்பதற்கு எத்தெய்வமும் இல்லையாகும். தேவரெல்லாம் நினது பிதற்றுரைகேட்டுச் சீற்றங்கொண்டு அவர்வாழ்கின்ற நாள்வரை உன்னை நரகத் துன்பத்தில் ஆழ்த்துவர். தேவருள் ஒருவர் உள்ளவரையும், நீ நரகிலிருந்து தப்ப மாட்டாய்.

## ஐக்கியவாதி சங்கற்பம்

### பெத்தநிலை

(5) அரிதேர்ந் துணராப் பெரியோ னுரைத்த
பதிபசு பாச விதிமுறை கிளக்கி

வீச னேக னெண்ணிலி பசுக்கள்
பாச மிருவகைப் பரிசின துலகத்
தாயவ னுயிர்க்கு மாயையி னருளா
லிருவினைத் தோகையி லுருவினைத் தருமாற்
கருமுகி லடர விரிதரு கதிர்போன்
றறிவா முயிரிற் பிரியா தேயு
மீட்டு மிருபய னூட்டிடு நியதிக்(கு)

திருமாலறியாப் பெரியோனாகிய பரமசிவன் கூறிய பதி பசு பாச உண்மையை உள்ளபடி சொல்லுவாம்:- பதி ஒருவன், பசுக்கள் கணக்கற்றவர்கள்; பாசமானது மாயை, வினை என்றிருவகைப்படும். அம்மையப்பன் உயிர்களுக்கு இருவினைக்கீடாகத் தனது அருளால் மாயையினின்று உடம்புகளைப் படைத்துக்கொடுப்பன். கதிரவனிடத்தே, மேகஞ் சேர்ந்தபோது அதன் ஒளி குன்றினாற்போல, சுத்த அறிவுடைய ஆன்மாவை உடம்பு பொருந்தி அவ்வறிவு குன்றும்படி நிற்கும். இருவினைப் பயன்களை உடம்பு வாயிலாக உயிர்க்குக் கடவுள் புசிப்பிப்பன்.

## முத்திநிலை

ஒருபோழு திருபய னுகர்வுற மருவுத
லின்மை யாதன் முன்னிய காலைச்
சத்தி நிபாத முற்றிறை யருளா
லுருவுகோ டுலகு தேரிவுற மருவி
மாசுறுந் தூசு தேசுற விளக்குந்
தன்மையி னுணர்த்தும் புன்மைக ணீங்கி
நீரு நீருஞ் சேருந் தகைமையி
னறிவினோ டறிவு சேறிவுறப் போருந்தி

யொன்று மென்பதை யுலகோர்
நன்று முத்தி யெனநவின் றனரே.

புண்ணியபாவப் பயன்களின் அனுபவம் சமமாக, அவை முற்றிலும் புசித்து ஒழிக்கத்தக்கநிலை வந்தபோது, அருள்வீழ்ச்சியுண்டாகும். இறைவன் திருவருட்டிருமேனி கொண்டு யாவருங்காண எழுந்தருளி, அழுக்குப் புடைவையைத் தூயதாக்குதல்போல ஆன்மாவைச் சுத்தப்படுத்தி அறிவளிப்பன். ஆன்மாவானது குற்றங்களெல்லாம் நீங்கப் பெற்று நீரும் நீரும் சேர்ந்தாற்போலச் சிவனறிவோடு தன்னறிவுகூடப்பெறும். அதுவே அறிஞர் முத்தியாமென்ப.

## ஐக்கியவாதி சங்கற்ப நிராகரணம்

### பெத்தநிலை மறுப்பு

(6) முத்தி யென்பதேவனை சுத்த
வறிவேனிற் பாசஞ் சேறியா மாயை
யுருவிரு வினையால் வருமிரு வினையு
முருவா லன்றி மருவா திவற்றின்
முந்திய தேதோ வந்தணை வதற்கோ
ரேது வேண்டுந் தானியல் பேன்னின்
வீடுற் றவரினுங் கூடக் கூடும்

சுத்தமாய் இருக்கும் உயிரின் அறிவைப் பாசம் எவ்வாறு பொருந்தும்? மாயையினலாகிய உடம்பு புண்ணியபாவங்களுக்கீடாக அமைவதாயின், புண்ணியபாவங்கள் உடம்பில்லாமல் எவ்வாறு செய்யப்படும்? ஆதலால், மாயாமலம் முன் ஏற்பட்டதா? கன்மமலம் முன் ஏற்பட்டதா? அவைகள் உயிரைச்சேர்வதற்குக் காரணம் வேண்டும். வெள்ளையுடையில் அழுக்கேறினாற்போல, இயல்பாகவே பாசங்கள்

உயிரைப் பொருந்துமென்னில், முத்திபெற்றவரையும் பாசங்கள் போய்ப் பொருந்தவேண்டும். அப்போது முத்தி யாற் பயன் யாது?

ஈங்கிவை நிற்க நீங்காக் கருவிகள்
கொண்டறி வறியக் கண்டது மன்றி
மருவிய வுருவு துயில்பெறுங் காலைச்
சிறுபொறித் தறுகட் கறையணற் சுடிகைத்
துத்திக் கடுவுட் டுளையெயிற் றுரகக்
கோத்தயல் கிடப்பினுங் குவைதரு நவமணி
யொருபாற் றுதையினும் பெருகார் வத்திறே
டச்சமு மணுகாக் கோச்சமை யென்னே

உடம்பும், மனமுதலிய கருவிகளும் உயிரைப்பிரிந்த இடத்து உயிர் ஒன்றையும் அறியாது கிடப்பதையும் அவைகொண்டே உயிர் பொருள்களை அறிவதையும் நீ கண்டிருக்கிறாயல்லவா? நன்றாக அயர்ந்துதூங்கும்போது, அருகே பாம்புக்கூட்டங் கிடந்தால் அஞ்சாதும், நவமணிக் குவியல்கள் கிடந்தால் விரும்பாதும் உயிர் இருத்தற்குக் காரணம் யாது?

கருவி யாவும் பிரிவுறு நிலையேற்
பொறிபுல னாதி குறைவற நிறைந்து
காட்சிய தளிக்கு மூட்சியின் முன்னர்க்
கொடுத்தோ ராழி விடுத்தவர் நாடிக்
கொள்வோர்க் காணா துள்கி மீண்டுழித்
தந்தவர் கண்டாங் கந்தமி லதனைத்
தருக வென்னும் பெருமதி பிறங்கும
தறிவி லாமையென் றனையது மலமாக்
குறிகோ ளாள ரறைகுவ ரன்றே

ஒருவனிடத்தில் ஒரு மோதிரத்தைக் கொடுத்து மீள வாங்கிக்கொண்டபின்னும், அதனைமறந்து மோதிரக்காரன் அதனைவாங்கி மீளக்கொடுத்தவனிடம் மோதிரம் எங்கே என்று கேட்பதற்குக் காரணம் யாது ? இவற்றிற்கெல்லாம் காரணம் அறியாமையென்னில், அவ்வறியாமையை எது விளக்கிறதோ அது ஆணவமலம் என்றறிவாயாக.

## முத்திநிலை மறுப்பு :-

அறிவிற் கறிவு செறியவேண் டின்றே
யுண்மையி லிருமையு மொளியே யெனிலொரு
தன்மை யாகமுன் சாற்றின ரிலரே
முன்பு நன்றுட னொன்றிய காலை
யின்ப மெய்துதற் கிலதுயி ராதலி
னீயலை பொருத மாயா வாதி
யாயினை யமையு மருணிலை கேண்மதி.

இனி, முத்திநிலையில், உயிர்தானே அறிவுவடிவாயிருப்பின், வேறோரறிவோடு அது கூடவேண்டியது எதற்கு? ஒளியும் ஒளியும் கூடினால் மிகுந்த பிரகாசமுணடாம் என்னில், உயிரினறிவும் இறையறிவும் நீரும் நீரும்போல ஒரு தன்மையன என்று அறிஞர் கூறவில்லையே. இறை தானே எல்லாம் அறியும், இறை அறிவிக்கவே உயிர் சார்ந்துநின்று ஒரு பொருளையறியும். மாயையும் வினையுங்கூடுவதன்முன் சுத்த அறிவாயிருப்பதென்ற உயிர் ஏன் இறையைக்கூடி இன்புறவில்லை. நீரும் நீரும் கூடும் உவமை குடாகாயமும் மகாஆகாயமுங் கூடுவதுபோலுமென்ற மாயாவாதியின் கருத்துடைமையால் நீயும் மாயாவாதியாவாய் ; ஆதலால், அக்கருத்தை விடுத்து உண்மைதெளிக.

## பாடாணவாதி சங்கற்பம்

### பெத்தநிலை

மூல மலத்தாற் சாலு மாயை
கருமத் தளவிற் றருமுரு விறைவன்
சேறிந்திரு பயனு நுகர்ந்திடு முயிர்க
ளிருளுறு மலத்திற் பருவரற் படுதலி
னிடையிரு நோக்குந் தடைபட் டோரிற்
றுயருறு மதனாற் செயிருறு துன்பம்

உயிர்களின் மூலமலமாகிய ஆணவமலத்தைப் போக்குவதற்கு மாயை அவற்றைப் பொருந்தும். உயிரின் வினைக்கேற்றபடி உடம்பை இறைவன் உயிர்க்குக் கொடுப்பன். உடம்பைப் பொருந்தி உயிர்கள் இருவினைப்பயன்களை அனுபவிக்கும். அனுபவிக்குமிடத்து ஆணவமல மறைப்பால் உயிர்கள் துன்புறும்.

### முத்திநிலை

கோத்தை மாந்த ருய்த்துறுந் துயில்போற்
காட்சி யென்னக் காணாத் துயர
மாட்சியை முத்தி யெனவகுத் தனரே. 6

கண் பார்வையைக் காச நோய் மறைத்தாற்போல ஆணவம் உயிரறிவினை மறைக்கும். அதனாற் பிறவித் துன்பம் மேன்மேலுளதாகும். அத் துன்பம் நீங்கித் தூக்கத்தில் மக்கள் துயரற்றுக் கிடப்பதுபோல, உயிரானது சுட்டிக்காணும் அறிவு யாதுமில்லாமல் இன்பதுன்ப நுகர்ச்சியில்லாது கிடக்கும் நிலையே முத்தியாகும்.

## பாடாணவாதி சங்கற்ப நிராகரணம்

(7) வகுத்துரை பெருகத் தொகுத்திடு முத்தி
நன்று நன்றிரு ளொன்றிய மலத்தா
முளத்திற் குறுபொறி செறிபுல னுகர்தல்
விளக்கிற் றிகமு மேன்மைய தன்றே
கருவிக ளகல்வுழி மருவிய துயரமு
நன்றென லாகுந் துன்றிய படலத்
திடைதடைப் பட்ட சுடர்விழி மாந்தர்
படல நீங்குதல் கடனு தலினே

பாடாணவாதியே, நீ கூறுமுத்தி ஆணவ மலத்தோடு கிடக்குங் கேவல நிலை போல்வது. ஐம்பொறி முதலிய கருவிகள் உயிரறிவுக்கு விளக்கந் தருவதால், உயிர்கள் கருவிகளோடு கூடியபோது ஆணவமல மறைப்பு எவ்வா றுளதாமென்று நீ விளக்கவில்லை கருவிகள் நீங்கிய போது உண்டாகும் துன்பமும் நல்லதென்னலாம். கண் ணிற் படலத்தை மருந்தினல் நீக்கியகாலை, சுகம் உண்டாக லின் என்க. கருவிகளை மீட்டுங் கூடிய காலை உண்டாகும் இன்பம் அதுபோல்வது.

காட்சி யென்னக் காணுத் துயர
மாட்சியை முத்தி யெனவகுத் துரைக்கிற்
காரணு பாவ மரணங் கருமர
மேய்ந்தவர் முத்தி சேர்ந்தவ ரன்றே
யனைய கதிக்கோர் முனைவரும் வேண்டா
தனிதரு துயர மெனுமிது திடமே
பாடாணத்திற் கூடா முத்தி

காட்சியில்லா நிலையும், இன்பதுன்பங்களில்லா நிலை யும் முத்தி நிலையாம் என்னில், மரணமடைந்தோரும்

கருவையடைந்தோரும் மரமாக நிற்கப்பெற்ளூரும், முத்தி யடைந்தவராதல்வேண்டும். அத்தகைய முத்தி பெறுவிப்ப தற்கு ஆசிரியன் வேண்டியதில்லே. ஆணவத்தோடுகூடிய கேவல நிலேயில் அறிவு விளங்கப்பெருத துயரம் உள்ள தாகும். அதுபோலக் கல்லுப்போலக் கிடக்கும் நிலேயிலும் அத் துன்பம் உண்டென்றறிக.

## பேதவாதி சங்கற்பம்

ஈசன தருளாற் பாசத் தொகுதி
சேறிவுறு செம்பிற் கறையுறு களிம்பு
குளிகை தாக்க வொளிபெற் ருங்கு
நித்த சுத்த முத்த ராக
வைத்தன ருலகின் மறைவல் லோரே. 7

செம்பின் களிம்பு இரத குளிகையினுல் நீங்கிப் பொன் தன்மை ஏற்பட்டாற்போல, தம்மைப்பற்றிய பாசங்கள் இறையருளால் நீங்கப்பெற்று, உயிர்கள் அழியாத, தூய முத்திநிலேயை யடைவர். உயிர் பெறுவானும் முத்திபேறு மாய் இருக்கும்.

## பேதவாதி சங்கற்ப நிராகரணம்

(8) மறைக ளாகமத் துறைகண்மற் றேவையு
நாசமில் பதிபசு பாசமேன் றுரைத்த
லயர்த்தோர் குளிகைச் சயத்தாற் ரும்பிரக்
காளித நாசம் பாசத் தேய்த்தல்
கூடாதன்றியுங் குளிகை சீருண
நீடா தழித்த நிலேநிலே யாதலிற்
பேத வாத மோதுதல் பிழையே

இன்னு மின்னுயி ரேமங் குளிகை
தன்னி லங்ஙியந் தருவது திடமே
வீடித் திறத்தினிற் கூடக் கூடா

எல்லா நூல்களும் பதி, பசு, பாசம் அழிவில்லாதன வென்று கூறிய உண்மையை மறந்து, பாச நீக்கம் செம்பிற் களிம்பு நீங்குவதுபோல்வதென்று கூறுவது, சுருதிக்கு மாறாகும். இரத குளிகையாற் செம்பு தன்னிலை கெடுமிடத்தே செம்பு அழிந்து பொன் தன்மை புதிதாக ஏற்படுமாயின் பசு என்னுந் தன்மைகெட்டுப் புதியதொரு தன்மை உண்டாகவேண்டும். அது உனக்கும் உடன்பாடன்று. செம்பு குளிகையும் ஆகாமல், தன்றன்மை கெட்டுப் பொன்னுந் தன்மை போல, பசுவுந் தன்னைச் சுத்தமாக்கிய சிவ சொரூபம் ஆகாமல் தன்றன்மைகெட்டு வேறொரு தன்மையடையவேண்டும். உண்மை அவ்வாறின்மையின், உன் கொள்கை பொருந்தாது.

## சிவசமவாதி சங்கற்பம்

பாசமும் பசுவு மீசனு மென்றிம்
மூவகை யுணர்வுந் தான்முதன் மையவாய்ப்
பாச வைம்புலன் றேசுற வுணர்த்தப்
பசுத்தனி ஞானம் புசித்திடு மன்றே
இனைய ஞானம் பிரிவுற வேரியாச்
சேந்தழ றகுநேறி யந்தமி லுயிரு
மறிவா யொன்று மறியா தன்றே

பதி, பசு, பாசம் என்ற மூன்றிற்கும் பதிஞானம், பசுஞானம், பாசஞானம், என்ற மூவகையறிவு எக்காலத்தும் உண்டு. பாசஞானம் ஐம்பொறிகளின் அறிவு. அது

உயிர்க்குப் பொருள்களை அறிவிக்கும். பசுஞானம் அவ்வறிவுகொண்டு பொருள்களை நுகரும். பாசஞானமும் பதிஞானமும் கூடாதபோது, கொழுந்துவிட்டெரியாமல் அனலாய்க்கிடக்குந் தீயைப்போலப் பசுஞானம் ஒன்றையும் அறியாதுகிடக்கும்.

இவ்வா றெழுகு மேனை யுயிர்க்கு
முன்னோன் றனது முதிரொளி ஞான
மறியாப் பச்சைச் சிறுபுழுக் கவர்ந்த
வண்டென வுயிரைக் கொண்டிடு முயிரது
தன்னை நோக்கித் தானது வாகி
ஐவகைத் தொழிலு மெய்வகை யுணர்வும்
பிரியா வாறு பெற்றுத்
திரியாப் பெரியோர் திரட்சிசேர்ந் திடுமே. 8

உயிர்கள் பாசத்தோடு கூடிக் கலப்பு நிலையும் அது கூடாத கேவலநிலையையும்பெற்று நடக்குமிடத்துப் பக்குவம் வந்தபோது, வண்டானது பச்சைப்புழுவைக் கவர்ந்தாற் போலப் பதிஞானம் உயிரைக்கவர்ந்துகொள்ளும். அப்புழு வண்டை நினைந்து அதன் வடிவமடைந்தாற்போல, பசுவும் பதியை நினைந்து பதிவடிவடைந்து முற்றறிவுற்று, வண்டுவடிவடைந்த புழு வண்டின் தொழிலைச் செய்தாற் போல, இறைவனைப்போல ஐந்தொழில் செய்யவல்லதாம். அத்தகைய முத்தான்மாக்கள் கூட்டத்தில் முத்திபெற்ற உயிர் நிலைபெறும்.

### சிவசமவாதி சங்கற்ப நிராகரணம்

பெத்தநிலை மறுப்பு :-

(9) சேர்ந்த மும்மை வாய்ந்த ஞானமு
மொருகா லன்றித் தெரிவுற நிற்கி

லொண்பொருள் காணும் பண்பினுக் கொருகாற்
பரிதியு மதியு மெரிதரு விளக்கும்
வேண்ட லின்றே காண்டகு காலை

**சங்கற்ப நிராகரணம்**

யொன்றோன் றாக நின்றறி வுறுமெனி
லங்கிய மறியா மன்னுயிர் பொறிபுலன்
றானே வறியா தலைவர்க் குலகினை
யானு வறிவா லறியவேண் டின்றே
கொழுந்தழ றகுமெனி லழுந்திடு மவத்தையிற்
றிரியாத் தலைவன் தெரியாத் தன்மைவந்
தெய்தலாகா.

மூவகை ஞானமுங் கூடியே ஒன்றை உயிர் அறிய வேண்டுமாயின், கண் ஒன்றைப் பார்க்க வேண்டுமிடத்துச் சூரியனும் சந்திரனும் விளக்கும் ஆகிய மூன்றும் வேண்டுவனவாகும். உண்மையில் அவற்றுள் ஏதாவது ஒன்றே பொருள்களைக் கண்ணுக்குக் காட்டுகின்றது. மூவகை ஞானமுஞ் சேர்ந்து ஒன்றை யறியுமென்பதற்குவமை யாதுமில்லை. ஒவ்வொன்றும் தனித்தனிப் பொருள்களை அறியும் என்னில், உயிர்க்கு வேறாகவே சடப்பொருள்கள் இருப்பதால், உயிர் அவற்றைக் கருவிகளின் உதவியின்றித் தானாக அறியமாட்டாது. ஐம்பொறிகள் சடமாகையால், அவை எதனையுந் தாமாக அறியமாட்டாதனவே. பதிஞானம் பேரறிவாகையால் எதனையுஞ் சுட்டியறிய வேண்டியதில்லை. கருவிகள் நீங்கிய இடத்து, உயிர் செந்தழலை யொத்திருப்பின், தன்னோடுள்ள முதல்வனை அது அந்நிலையில் அறியாதிருப்பதற்குக் காரணம் யாதுமில்லை.

........மெய்யுறு பொருட்டு
முன்னர்க் கீடந் தன்னனை யெடுத்த
வேட்டுவ னியல்பு கூட்டல் பெறாதே
வண்டேறும் பேடாவுட் கொண்டது தனக்கு
மந்திர வாதந் தந்தது மிலதே
யெடுத்திடு மதனா லடுத்ததேன் றறையிற்
கருமயிர்க் குட்டி யிருசிறைப் பறவை
யாயின தெடுத்த தாயர்சாற் றிலரே
பிறவிப் பேதத் துறையிவை கிடக்க
வேயு மித்திர னாயுங் காலை
யோகத் தகுதி யாகத் தகுமே
ஞான மின்மையென் றேதுவ தேவனெனி
லுயிரு முணர்வும் பயிலுத லின்றி
வேட்டுவ னுருவ மேன்புழு வுணர்வு
கூட்டுத லாலுருக் கூடுத லானா
முத்தியி லிறையிற் பற்றுத லின்றித்
தன்னுரு வணைந்த பின்னத னுணர்வு
மாறுத லானா மூறுடைத் தன்றே

இனி, முத்தியைநாடும் உயிர்க்கு ஒன்றுமறியாமற் கிடந்த பச்சைப் புழுவை உவமை கூறுதலும், ஞானோபதேசஞ் செய்யுங் குருவுக்கு அத்தகைய உரையொன்றும் நிகழ்த்தாத வேட்டுவனை உவமை கூறுதலும் பொருந்துமாறில்லை. வேட்டுவன் எடுப்பதே உபதேசம் என்னில், உபதேசங் காரணமாக உயிர் ஞானம் பெற்றுச் சிவசொரூபம் உற்றாற் போல, வேட்டுவன் எடுத்த காரணத்தால் மயிர்க்குட்டிப்புழு வேட்டுவனைப் போலப் பறவையாய் விட்டதென்று சொல்வாரில்லையே. புழு வண்டாதல் அச்சுமாறிப் பிறத்தற்கு

உவமையாகுமன்றி உயிர் முத்தியடைதற்கு அது உவமையாகாது. புழு நினைவாற்றலால் வண்டாயிற்றென்பது சாரூபப்பயன்தரும் யோகத்திற்கு உவமையாயினும் அது ஞானத்திற்கு உவமையாகாது. சிவசொரூபமடைதல் ஞானப் பயனென்று ஏன்சொல்லுதல் கூடாதெனில், உயிருஞ் சிவமுமொன்றுபட்டிருப்பது ஞானமாமேயன்றி வேறுபட்டிருத்தல் ஞானநிலையாகாது. நீ சொல்லும் உவமையால் முத்தியில் ஓர் உடம்பு உண்டென்பது பெறப்படும். அப்போது உயிர் சிவத்தோடு கூடாதிருப்பதோடு, புழு உண்டானபின் அதற்கு முன்னுணர்ச்சியில்லாமையால் உயிர்க்கும் அறிவு மாறுபடும் என்பது பெறப்படும். அது ஞானத்திற்கு மாறாகும்.

ஈசன தியல்பரு ளேய்துயி ரியற்றல்
பேசுத றவறெனப் பெருமறை யறைய
வைந்தொழி லுயிருந் தந்திட றகுமோ
யாவதேன் முன்னா ணுவலர் பெருமான்

சித்தாந்த சாத்திரம்

பண்டொரு முதலை யுண்டமைந் தனைவர
வழைத்தன னென்றாய் பிழைப்பில ததூஉந்
தந்திட வேண்டு மென்றன ரன்றே
யின்னவை கிடக்க முன்னவன் றன்மை
யெய்தின ரெல்லாச் செய்தியுஞ் செய்வ
ரிரும்பேரி யெய்தித் தருஞ்சேய றகவேனிற்
பொருணிலை கிடக்க வொருதிட் டாந்தப்
பேறே யாயிற் சீருக் கதுவிய
புனலொரு புடைசேர் கனறகு மாயினும்
வேறொரு பொருளே நீருக் கிலதே

நெருப்பெனு மிதனி னுருத்தனி காட்டுக
வங்கியு மோன்றிற் றங்கினின் றல்லது
தன்றொழி னடத்தா தென்றறி யினிநீ
யிரும்பனற் செய்தி தரும்பரி சுளதோ

இனி, இறைவனுக்கியல்பாயுள்ள ஐந்தொழிலை அருள் பெற்ற உயிர் இயற்றுமென்று சொல்லுவது குற்றமென்று பெரிய நுண்ணிய நூல்கள் இயம்புதலின், அவ்வாறு நீ கூறுதல் தகாது. திருநாவலூரர் முதலையுண்ட பாலனை அழைத்தாரென்னில், அவர், இறைவனைப் பிள்ளை தரும்படி வேண்டினரேயன்றித் தாமாக யாதுஞ் செய்யாமை அறிக; 'கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச்சொல்லு காலனையே' என்றது காண்க. முதல்வனது தன்மையை அடைந்தவரே ஐந்தொழில் செய்வர்; இரும்பு தீயைப்பொருந்தி அதன் வடிவுற்று அதன் தொழிலையுஞ் செய்வது காண்க என்னில், தண்ணீர் தீயொடு பொருந்தி வெம்மையுற்றாலும், வைக்கோல் முதலியவற்றைத் தீப்போல, வெந்நீர் சுட்டெரியாமைக்குக் காரணம் என்னை? தீ தனித்துநின்றாற் சுடும் என்னில், அது தனித்துநிற்பது எங்கே காணப்படும்? தீ ஒன்றைச் சார்ந்துநில்லாது தன்றொழில் நடத்துவதில்லை. தீயானது இரும்பைப் பற்றி நின்று தன்றொழில் செய்யா நிற்கவும், தீயின் தொழிலை இரும்பின்றொழில் என்பது எவ்வாறு பொருந்தும்?

அதுவேனோ ரலகை போதிதருங் காலை
யதன்செய லனைத்து மிவன்செய லாமா
லவனிவ னாகி லிவனவன் செய்திக்
கென்னவை யென்னிற் பின்னுறு செயலு
மதன்செய லன்றி யிவன்செய லாகி
லிவன்செயல் பேயின் றன்செய லாகி

யிருந்த வாவெனத் தெரிந்திட வேண்டுந்
தெரியா தாகிற் புரியிற் கடுங்கன
லெரிந்த தென்னு மிதுதகு மன்றியு
மவனிவ னாகி லிவனவன் செய்தி
யென்று செய்வா னொன்றிய மதத்தாய்

பேய் ஒருவனைப் பிடித்தபோது பேயின் செயல் பிடிபட்டவன் செயலாமல்லவா என்னில், பிடிபட்டவன் மூலமாகப் பேயின் செயலே நிகழ்தல் போல, சிவம் ஆன்மாவிற் கலந்து செய்யுந் தொழில்கள் சிவத்தின் செயலாமன்றி ஆன்மாவின் செயலாகாதென்றறிக. சிவன் செயல் நிகழ்தற்கு முத்தியுற்ற உயிர் உரியவாயிலாம் என்னில், பேய் நீங்கியபோது, விடுபட்டவன் செய்யுஞ் செயல் பேய்ச்செயலாவதில்லை. ஆதலால் முத்தியுற்ற உயிரின் செயலெல்லாம் சிவன் செயலே யென்பதெவ்வாறு? பேய் பிடித்தபோது, நிகழும் பேய்ச் செயலைப் பிடியுண்டவன் தன் செயலென அறிவதில்லையாயின், வைக்கோலினிடத்திற் பற்றிய தீயின் தொழில், தீயினதேயன்றி வைக்கோலினதாவதில்லை. அது போல உயிரிற்கலந்த சிவன் செயலுமாமென அறிக. மேலும், என்றும் பாசபந்தத்துட்படாத இறைவன் செயலைப் பந்தத்தினின்று விடுபட்ட உயிர் எப்போதுஞ் செய்ய வல்லாதா?

எல்லா மறிதல் செல்லா துயிர்கள்
சிற்றறி வெனுமிச் சொற்றவ ருகு
மென்பதே னலகை தன்பத மடைந்தோர்
கொண்ட வாறு கண்டன மென்னின்

**சங்கற்ப நிராகரணம்**

மூங்கை யந்தருற் றோங்கிய குணங்குறி
செய்வதே னின்னும் பௌவமுற் றழுந்தினு

நாழி கொள்ளா தாழியி னலைபுன
லதனுற் கருத்து முதலுள தாக
வேண்டு மன்றே யீண்டினி யமையு
மெல்லா மெனுமிச் சொல்லாற் படும்பொரு
ளனைத்துந் தாக்காத் தனிப்பரத் துற்றவர்க்
கெவ்வகை யுணர்வு செய்வதென் செப்புக

இனி, முதல்வனைப்போல உயிர்கள் முற்றறிவுடையன என்னில், உயிர்கள் சிற்றறிவுடையன என நூல்கள் கூறுவது தவறாகும், பேயின் தன்மை பிடிபட்டவனுக்கு உண்டாமென்னில், பேசும் வன்மையும் கண் பார்வையுமில்லாத ஒருவனை .அவற்றையுடைய பேய் பிடித்தபோது, அப்பேய் அவனைப் பேசவும் பார்க்கவுஞ் செய்ய வல்லதா? பேய் அவ்வாறு செய்யாவிடில், பேயின் தன்மை முழுவதும் பிடிபட்டவனுக்கு உண்டென்பதெவ்வாறு? நாழியைக் கடலில் எவ்வளவு அமிழ்த்தினாலும் கடல் நீர் முழுவதையும் நாழி முகந்து கொள்ள முடியுமா? ஆதலால் உயிர்க்கு உள்ள அறிவே திருவருளால் விளக்கம் அடைவதன்றி, உயிர்முதல்வனது முற்றறிவைப் பெற்றுவிடும் என்பது பொருந்தாது.

ஒன்றி னொன்று மொன்று துலகி
னின்ற போதுயிர் நேரா மன்றே
முத்தி யுற்ற நற்றவ ரவையிடைச்
சேர்வ ரென்றனை சார்தரு முத்தி
சாலோக் கியமோ சாயுச் சியமெனிற்
பந்த முற்ற கந்தல் கழித்த
வறிவினோ டறிவு பிறியாப் பெற்றி
வேண்டு மென்றதற் கீண்டிவ ரிவ்வா
றிருப்ப ரென்பதற் குருத்தான் வேண்டு

மண்ணல தருளி னண்ணி யிருப்பினுஞ்
சீவன் முத்தரென் றோதின ரகன்று
நீங்கியு முருவ நீங்கா தாயி
னோங்கிய முத்தி யாவதென் னுரைக்க
சேடியுட லணுகாக் குடிலை கொடுக்குமென்
றோதினை நீயே பேதாய் பகட்டுர
லோளிர்சினை முச்சித் தளிரேனு மிதுதகு
மிச்சா ரூப நச்சின ரென்னின்

## சித்தாந்த சாத்திரம்

மும்மலத் தேது மின்மைய தன்றே
யிதுவளர் முத்திப் பதமென வியம்புவ
ரீங்கிவை நிற்க.

இனி, உயிர் முத்தி நிலையிற் சிவனோடு ஒன்றுவதில்லாமல் உடலோடு சீவன் முத்தி மாத்திரம் உடையதென்னில், அது சிவத்திற்கு ஒத்த நிலையாவதில்லையே. அடியார் கூட்டத்திருத்தல் சாலோகமோ, சாயுச்சியமோ? அது சாயுச்சியம் என்பையாயின், பந்தம நீங்கிய உயிர் சிவத்தோடு நீங்காதிருப்பது சாயுச்சியமாதலின். அவ்வாறு அறிவுக்கறிவாய சிவத்தோடு உயிர் கலவாமல், முத்திபெற்ற பெரியாரோடிருப்பதற்கு உடலினை உயிர் அவாவி நிற்கும். உடலோடிருத்தல் சீவன் முத்தி; உடலின் நீங்கிய நிலையே மேலான பரமுத்தி யென்று நூல்கள் கூறவும், நீ சீவன் முத்தியே மேலான முத்தியென்றல் எப்படிப் பொருந்தும்? முத்திபெற்ற உயிர்களின் உடல் சுத்தமாயா சம்பந்தமுடையது, மயக்கந்தரும் அசுத்த மாயா சம்பந்தமுடையதன்றெனில், நீசொல்வதுவேப்பமரத்தின் அடிக்கட்டை கசக்கும்;

அதன் கொம்பு நுனித்தளிர் கசப்பதில்லையென்று கூறுவது போலும். முத்தர் தாம் விரும்பிய உடம்பை எடுத்துக் கொள்ளுவர் எனில், அவ்வுடம்பெடுத்தற்கேதுவாய மல மாயா கன்மங்கள் முத்தரைவிட்டு ஒருக்காலும் நீங்குவதில்லை யென்பது கருத்தாகும். நீ சொல்லு முத்தி பத முத்தியே, பரமுத்தியாகாது என்றறிக.

## சங்கிராந்தவாதி சங்கற்பம்

நீங்கா தொளிருயிர்
விளக்கென நிற்கு மளப்புறு மறிவின்
றிறைவர்க் கேது மறியவேண் டின்றே
மன்னு மான்ம சந்நிதி யளவிற்
காந்த பசாசத் தேய்ப்ப வாய்ந்த
வுயிருட லியக்குஞ் செயலுறு பூட்டைப்
பலவகை யுறுப்பு மிலகிய தொழில்போ
லைம்பொறி புலன்க ளின்புறு மன்றே
யினைய வாய்தலி னிகழ்தரு பயனவை
யந்தக் கரண முந்தி யுணர்ந்திடு
மிவையகல் வுழியைம் பொறிபுல னிகழா
வுயிர்நீங் கிடிலுடல் செயலில தன்றே
யிவ்வகை வினையின் செவ்விதி நடத்தும்

உயிரானது நீங்காத ஒளியுடைய விளக்குப்போல உள்ளது. அதற்குச் சுட்டியறியும் அறிவு கிடையாது. இறைவன் தனக்கென ஒன்றையும் அறியவேண்டிய சாரணம் இல்லை. காந்தம் விகாரமில்லாது நிற்க, அதன்முன் இரும்பு தொழிற்படுதல்போல, விகாரமில்லாத உயிர் முன்னிலையில்

பிராணவாயு உடலைக் காரியப்படுத்தும். கிணற்றில் நீர் இறைக்கும் பூட்டையின் பல பகுதிகளும் தொழிற்பட்டாற் போல, ஐம்பொறிகள் தமக்குப் புலனாகின்றவற்றை அனுபவிக்கும். அவற்றிற்கு முன்பாகப் புலன்களை அகக்கருவிகள் உணரும். அகக்கருவிகளின் உதவியில்லாமல். ஐம்பொறிகள் புலன்களைப் பொருந்தமாட்டா. பிரணவாயு பிரிந்தால், உடல் தொழிலின்றிக் கிடக்கும்.

பழமல நீங்க நிகழுங் காலை
யேற்றோர் முகவொளி தோற்றுங் கலனெனத்
தலைவன தருளுயிர் நிலவிடு நிலவக்
காட்டத் தங்கி மாட்டத் தங்கிய
தன்மையு மளத்துப் புல்லைவயி னீப்பும்
போன்றது வாகித் தோன்றிடு மதனாற்
பசுகர ணங்கள் சிவகர ணங்க
ளாக மாறி யறிவு
மேக மாமுயி ரியானென தின்றே. 9

இவ்வாறு உயிர்முன் உடல் தொழிற்படுங் காலத்தில், ஆணவ மலம் நீங்குதற்குரிய பக்குவம் வந்தபோது, கண்ணாடியிற் பிரதி பிம்பந்தோன்றுவதுபோல், இறைவனது திருவருள் உயிரினிடத்திற் பிரதிபலிக்கும். அப்போது விறகினிடத்தில் எழுந்தீயால், விறகு அழிவது போலவும். உப்பளத்திற்போட்ட புல்லும் வைக்கோலும் தம்தன்மை கெட்டொழிவது போலவும், உயிர்தன்தன்மை கெட்டு அருள் வடிவாய் விடும். அதனாற் பசுகரணங்கள் சிவ கரணங்களாக மாறி உயிரறிவு இறையறிவோடு கூடி ஒன்றாய் விடவே உயிர்க்கு யான் எனது என்ற உணர்ச்சி இல்லையாகும்.

## சங்கற்ப நிராகரணம்

## சங்கிராந்தவாதி சங்கற்ப நிராகரணம்

(10) இன்றுன துரையி னன்றி யுயிரோளிர்
தீபம் போலத் தாபந் தரினிருள்
செறியுந் தன்மையே னறிவில தாகி
லோளியேன வுரைத்த தேளிவதற் கேதாம்.

உயிர் விளக்குப்போலொளிர்வதெனின், அதன்கண் அறியாமை யேது? அது அறிவிலதெனின், ஒளியென்பதற் கேதுவென்னை?

சந்நிதி யளவின் மன்னுஞ் செயலுடல்
காந்தம் போல வாய்ந்த தேன்ற
தன்மையு முணராப் புன்மைய தன்றே.

மனம், பொறி, புலன், இவற்றைத் தொடர்பு படுத்திக் காரியப்படுத்த உயிருஞ் சடத்தின்றன்மையை யுடையதாய்ச் செயலற்றுக் காந்தம்போலிருப்பதெனின், அறிவுப் பொருளின் தொடர்பே உடம்பிற்கு வேண்டியதின்றே.

உயிருட லியக்கிற் றுயில்பெறுங் காலைச்
செய்ததேன் மனுதி யெய்துயிர் போறிபுலன்

பிராணவாயுவே (உயிர்க்காலே) உடம்பையியக்குமாயின், துயிலும்போது பிராணவாயு இயங்கியும் உடம்பு இயக்கம் பெருமைக்குக் காரணமென்னை?

நடத்த வாவியுஞ் சடத்தன வாயிற்
பூட்டையிற் பூணி கூட்டல் பெறுதே.

பூட்டையானது அதிற் பூட்டப்பட்ட காளைகளால் தொழிற்படுதலால், நீ கூறும் உவமை செயலற்றிருக்கும் உயிர்க்குப் பொருந்தாது.

புலனைம் பொறியி னிலவிடு மென்றனை
யஞ்சு மொருகாற் றுஞ்சா தறிதற்
கழிவென் றருச்செழு மலரிலை யோடுபலங்
கனிதரு வதுபோ லினையவை யைந்து
மொன்றொன் றாக நின்றறி வுறுமேனி
லொன்றின் பயனனி யொன்றறி யாதா
லிதுவே யல்லது கதுமென விருசெவி
யிருகூற் றொருகாற் றெரியாத் தன்மைவந்
தெய்து மனுதியு மெய்யுயிர்ச் செயலுந்
தனக்கில தொருவற் கெனத்தெளி கிலையே.

ஐம்பொறிகள் புலன்களை நுகருமாயின், ஐந்தும் ஓரே பொழுதில் தத்தம் புலனை யொருங்கறியாமைக் கேது வென்னை? இலை, மலர், காய், கனியென்பன, ஒரு மரத்திலே வெவ்வேறுகாலத் துளவாதல்போல, ஐம்பொறிகளும் ஒன்றொன்றாக ஒவ்வொருகாலத் தறியுமென்னில், ஒரு பொறி யறிந்ததன்பயனை மற்றொரு பொறி நுகராமையாலும், ஐம்பொறியுணர்வின் பயனை ஒருங்கு நுகரும் உயிர் வேறுண்மையாலும், ஐம்பொறிகள் நுகர்ச்சியுடையனவென்பது தவறு, மேலும், இருவருடைய ஓசையை இருகாதிலுங் கேட்டும், ஒருவர் செப்பியதை யறிந்தும் மற்றொருவர் செப்பியதை அறியாதுமிருத்தல் காணப்படுதலின், பொறியினைச்சார்ந்தறிவது உயிரென்றுய்த்துணர்க. இவ்வாறே அந்தக் கரணங்களின் றொழிலும் உயிரினதே யெனத் தெளிக.

நோக்கு முகவொளி நீக்கா தானெனக்
கவருந் தன்மை முகுரம் போலக்
கொடுத்தது கோடற் கடுத்துண் டன்றே
காட்டத் தங்கி கூட்டக் கூடு

**சித்தாந்த சாத்திரம்**

மிந்தனத் தியற்கை வெந்தழ ருங்கா
வுப்பளத் தடுத்த புற்பலா லங்கள்
சடத்த வேனுங் கொடுத்தது கொள்ளுந்
தன்மை யுண்டுனக் கின்மைய தன்றே.

கண்ணாடியை உயிர்க்கு உவமைகூறல் பொருந்தாது; கொடுத்ததைக் கொள்ளுந் தன்மை உயிர்க்கில்லை. தீ விறகை எரித்துவிடுதல்போல, திருவருள் உயிர்த் தன்மையைத் தொலைத்துவிடுதல் இல்லை. அங்ஙனமாயின் திருவருட்பேற்றினாற் பயனிலதாம். உப்பளத்துப் புல்லும் வைக்கோலும் உப்பின் றன்மை பெறுமேயன்றி ஒழிந்து கெடுவதில்லை, அங்ஙனம் கொடுத்ததைக் கொள்ளுந்தன்மை உயிர்க்கில்லை.

அவமுறு கருவி சிவமய மாமெனக்
கூறினை யாகம் வேறுருக் கவரா
தேன்புதே னவைமுற் றுன்பந் துடைக்குந்
திருவருண் மருவ வுரியன வென்னி
லருளுரு மாயா விருளின தாங்கொல்
சத்த பரிச ரூப ரசநறை
யேத்திறத் தினதரு ளியம்புக வன்றியு
நிறைந்து நீயாய் நின்றனை யேனு
மறைந்தைம் புலனாய் வாரா யென்றுங்

கரண மெல்லாங் கடந்தனை யென்று
மரணமை யைந்தி னப்புறத் தென்று
முன்னருட் டலைவர் பன்னின ரெனவு
மினையவை யொழிய வறிகுவ தெவ்வா
றென்ற நிற்கலிக் கோன்றிய வின்பங்
கூறத றகும்.

பசுவின் கரணங்களென்பன மாயையிலாய கருவிகள்; அவை திரிபுணர்ச்சி பயப்பன. அவை திருவருளின்றன் மையை எவ்வாறடைதல் கூடும்? சடமாயவுடம்பு தன்னின் வேறுபட்ட இயற்கையுடைய திருவருளின் தன்மையைப் பொருந்தாது. அருளுருவம், மாயா இருளுருவமாகாது. பொறிகளினுதவியின்றி உயிர் திருவருளை யறியாதென்பது தவறு. அது எவ்வாறெனில், அது ஞானம் பெற்றார்க்கு விளங்குமன்றிப் பிறர்க்கு விளங்காது. அது ஒருவனு மொருத்தியுங்கூடி நுகர்ந்த இன்பத்தை அலியாயுள்ளா ரறியாமை போலுமென்க. "ஐம்புலன்காணவாராய்," "கரணங்களெல்லாங் கடந்து நின்ற கறைமிடற்றன்," "ஐயறிவின் அப்புறத்தானும்" என்ற திருவாக்குக்களின் பொருளை உற்று நோக்குக.

… ….அருட் பேறினை யன்றே
ஏக முயிரறி வாக மொழிந்தனை.

பசுகரணங்கள், சிவகரணங்களாக மாறினும், கரணங்கள்கொண் டறியப்படுவன மாயையின் காரியங்களே யன்றித் திருவருளாகாது.

இருபொரு ளொருமை மருவிய திலதே
யிவ்வகை கிடக்க மெய்வகை கேண்மதி.

அருளும் உயிருமாகிய இருவேறுமுதல் ஒரு முதலாயி லன்றி அறிவு ஒன்றாகாது. அங்ஙனம் இருமுதல் ஒருமுத லாதல் சற்காரியவாதத்திற்கிழுக்காம்.

### ஈசுர அவிகாரவாதி சங்கற்பம்

பஃறுளைக் குடத்தி னுள்விளக் கேய்ப்ப
வறிவுள தாகு முருவுறு முயிர்கள்
கண்ணா லோசையுங் கந்தமுங் கருத
வொண்ணா தென்னு முணர்வுடை மையினா
லவ்வப் புலன்கட் கவ்வப் பொறிகள்
செவ்விதி னிறுவிச் சேர்ந்தவை நுகரும்.

பல துளைகளையுடைய குடத்துள் இருக்கும் விளக்குப் போல ஒன்பது வாயில்களுடைய உடம்பில் உயிர் அறிவாய் இலங்கும். ஐம்பொறிகளுள் ஒன்றறிந்ததை மற்றொன்றறி யாமையின், அவ்வப்பொறிகளைக் கலந்தே உயிர் விடயங் களை நுகரும். உயிரானது பொறியின் வாயிலாகவே ஒன்றை அறிந்து நுகரும்.

மூல மலத்தின் பாகம்வந் துதவுழி
யிருடரு மிற்புக் கொருபொருள் கவரத்
தீபம் வேண்டு மானவா போல
மோக மாமலம் போக ஞான
விளக்கர னருளாற் றுளக்கறப் பொருந்தி
நீர்நிழ லனைய சீர்பெறு கடவுளைச்
சலமில னாகிச் சார்ந்தவர்க் கென்று
நலமிக நல்கு நாதனை யணைந்து
பூழி வெம்மை பொருந்தா துயர்ந்த

நீழல் வாழு நினைவினர் போலத்
திருவடி நீழல் சேர்ந்து
கருவுறு துயரங் களைந்திருந் திடுமே. 10

மலபரிபாகம் வந்தபோது, இருள் வீட்டிலுள்ள ஒரு பொருளை எடுத்தற்கு விளக்கினை முன்னர்க்கொண்டு போவது போல, இறைவனது ஞானமாகிய விளக்கை அவனருளாற் பெற்று, நீர்போலவும் நிழல்போலவும் பொதுநிலையில் ஒருவன்பாலுஞ் சார்பின்றி நிற்கும் பரம் பொருளைத் தன்னையடைந்தார்க்கு இன்பங்கள்தருந் தலைவனை, வெயிலிற் சென்றோர் மரநிழலை அடைந்திருத் தல்போல, அடைந்து உயிர்கள் பேரின்பமெய்தும்.

### ஈசுர அவிகாரவாதி சங்கற்ப நிராகரணம்

(11) இருந்ததுன் கேள்வி திருந்திடு முயிர்க
ளறிவெனில் வாயிற் பொறிபுல னென்னை
மற்றவை பற்றி யுற்றறிந் திடுதலி
னறிவென வழங்கு முயிரென வுரைத்தல்
காணுங் கண்ணினன் கைகோடு தடவிப்
பூணும் பொருளின் பெயர்பல புகற
லென்னுங் கிளவி தன்னோடு தகுமே
யவ்வப் புலன்கட் கவ்வப் பொறிகளைச்
செவ்விதி னிறுவலி னறிவெனச் செப்பினை
யறிவி லாமைகண் டனமனை புலற்குப்
பொறிக ளேவலி னறிவோடு பொருந்திற்
கண்டதோர் பொறியாற் கொண்டிட வேண்டும்.

உயிரானது அறிவாய்த் திகழ்ந்தாற் பொருள்களை யறியப் பொறிகளினுதவி யெற்றிற்கு? அறிவு தானே விளங் கப்பெற்ற உயிர், பொறிகளினுதவியாற் பொருள்களையறியு

மென்பது, கண்டெரிபவன் கையாற்றடவிப் பொருள்களின் றன்மையறிந்து அவற்றின் பலபெயர்களைச் சொன்னானென் பதனோடொக்கும். புலனுக்கேற்ற பொறிகளைச் செவ்விதிற் புணர்த்துப் பொருள்களை யறிதலின், ஆன்மா அறிவு திகழப்பெற்றதே யெனில், அதுகாரணமாக உயிரை அறிவு விளக்கமுடையதாகக் கூறுதல் தவறு. அது ஏதாவது ஒரு பொறியைக்கொண்டே வேண்டிய புலனை நுகரவேண்டும்.

. உதவிய தோன்றாற் கதுமென வியற்றின
ருண்டோ வென்னிற் கண்டன மேனாட்
கடவுளிற் கடிமலர் முடுகிய மதன
னங்க மனங்கந் தங்கிடக் கிடந்தது
வையின் றிரளிற் செய்ய சிறுபொறி
மாட்டி முட்டின தன்றே மீட்டுந்
தேனமர் தவிசி னான்முக னுச்சி
யறுத்ததுங் கருவி பொறுத்தோ வன்றே

காதினால் ஒலியை யறிதல் உலகத்திற் காணப்படுவதே யொழியக் காதினால் ஒருபொருளைக் காண்பார் யாருமில்லை யெனில், அறிவாய் விளங்கும் முதல்வன்மாட்டு அது நிகழும். இறைவன் மன்மதனை யெரித்த காலத்தே, வைக் கோலை அவன் மீதிட்டுத் தீக்கொளுவவில்லை. கண்ணாற் பார்த்த மாத்திரத்தே அவன் எரிந்தொழிந்தான். நான்முகன் றலையை அரனார் வாள்கொண்டு வெட்டவில்லை.

ஈசன தியல்பு பேசுத றவிர்க
காழி மாநகர்க் கவுணியர் கடவுண்
ஞான மாகிய நற்பதி கங்க
ளெழுதுறு மன்பர்த மின்புறு மொழியாற்
களிறென வணைந்த கன்மனப் புத்தன்

முருட்டுச் சிரமோன் றுருட்டின ரன்றி
வாய்ந்த வாளோன் றேந்தின ரிலரே
யென்றது மீர்வாள் கொன்றதென் பதுபோற்
றனித்துணை யருளாற் றுணித்தன ரென்ப
வாதலின் வாயி லளவினி லறிதலி
லேதமி லறிவுயிர்க் கெய்துத லிலதே.

இறைவனியல்பு அவ்வாறாயினும், உயிரினியல்பு அவ்வாறாகாமையின், உயிரும் இறைவனதருள் கொண்டே அருஞ்செயல் ஆற்றவல்லது. திருஞானசம்பந்தப் பெருமான் திருப்பதிகங்களை எழுதிய சம்பந்தசரணாலயர், திருப்பதிகப் பாட்டொன்றெழுதிய குறிப்பினை வீசிப் புத்தன் தலையை உருள்வித்தமைகாண்க. அதுபோல உயிர் ஒன்றை யறிவதுந் திருவருட்டுணைகொண்டே யென அறிக. பொறிகளின் துணைகொண்டறியுமறிவு, அவற்றின் எல்லையுள் பட்டதாகலின், குற்றமற்ற அகண்ட அறிவு திருவருளாலன்றி உயிர்க்கு அமைதலில்லை

இருட்கு விளக்கொன் றேந்தினர் போல
மருட்கு ஞான மன்னுத லுளதே
யென்றனை கருவிக ளியாவு மசேதனந்
துன்றிய வுயிருந் துரியத் தன்மைய
ஞுதலி னந்த ரனைவருங் கூடித்
தீதற வருநெறி தெரியுமென் றற்றே
நீர்நிழ லனைய சீர்பெறு கடவுளைச்
சேர்ந்தவர்க் கின்பம் வாய்ந்திடு மென்றனை
பாதவ மென்றுஞ் சேதன மின்மையி
னிளைத்தோர் வம்மி னென்பதுந் துன்பம்
விளைத்தோர் தம்மில் வெறுப்புமொன் றிலதே

பொடித்திடு கொப்புள் வெடித்திடு பாதம்
வெய்ய பூழியி னுள்ளூற வழுங்கி
யாற்றுத லின்றி யாறியங் கினர்முன்
னேற்றிடு மென்று சொல்லவு மிலதா
லிவ்வகை கடவுட் கியம்புத றவறே
பாச ஞானப் பழிவழி யொழிக
வீசன தருள்வழி யியம்புவன் கேண்மதி.

இருளில் விளக்கினைப்பயன் படுத்துவதுபோல, இறைவனது ஞானவொளி கொண்டு, உயிர் தானே உண்மையுணரு மென்பது பொருந்தாது. கருவிகள் அறிவிலாதன; அவையொழிந்த உயிர் துரியநிலையில் நிற்பது; ஆதலின், அத்தகைய உயிர் முதல்வனது ஞானத்தைத்தானே யறிந்து பயன்படுத்துமென்றாய். அது குருடர் பலர் கூடிக் கதிரவனொளிகொண்டு பெருவழியிற் சென்றார்களென்பதனோடொக்கும். நீரையும் நிழலையும்போல இறைவன் இருப்பானென்னில், அறிவில் பொருள்களாய அவைபோல, இறைவன் வலிதில் நம்மையாட்கொள்ளாது தானிருந்தவாறிருப்பனென்பது போதரும். அங்ஙனம் அவனிருந்தால் நாம் உய்தல் அரிது; ஆதலால் நீ கூறுவது தவறு,

### நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்பம்

புவன மியாவையும் புனிதன துருவாஞ்
சிவமுஞ் சத்தியு மெனத்தெளி யவற்று
ளசேதன மென்றொன் றறைதற் கிலதது
சேதன னுகர்பொழு திரண்டுமோர் திறத்தே
யிதுவெனு மொன்றை யதுவாய்ப் படுத்துப்
பொதுமையி னிற்கும் போதமென் றறிக

போற்பணி பேதம் புரைவழி யோருவழி
நற்போனிற் றிகழ்வேன நயப்பதோன் றன்றால்.

உலகம் யாவும் சிவவடிவமுஞ் சத்திவடிவமுமாமென் றறிக. (சிவம் அருவம், சத்தி உருவம்) உலகத்திலே ஒன்றையுஞ் சடமென்று கூறுதற்கிடமில்லை. அறிவுடைப் பொருளும் அறிவில் பொருளும், அறிவுடைய உயிரின் நுகர்ச்சிக் கண் ஒரு தன்மையனவாயுள்ளன. இது வென்று சுட்டப்பட்ட தொன்றை நுகருங்கால், அறிவு அப்பொருளே யாய்நிற்றலின், ஆண்டு அறிவென்றும், அறிவிலாப்பொருள் என்றும் பகுக்கப்படுமாறில்லை. பொன்னுக்கும் பணிக்கும் வேறுபாடிருத்தல்போல, அறிவிற்கும் உலகிற்கும் வேற்றுமை ஒருவழியாகக் கூறுதலுண்டு. மாற்றின் தன்மை பொன்னுக்கும் பணிக்குமொன்றுதல்போல, இரண்டிற்கும் உண்மையில் ஒருதன்மையேயுண்டு. ஒன்று காரியப்பட்டது; மற்றொன்று காரியப்படாதது.

ஆவது மாகா தோழிவது மேனுமிப்
பாவக முண்மை பாரா தோர்க்கே.

ஒன்று ஆகும்; இன்னொன்று ஆகாது என்ற நினைவு உண்மையுணராதோர்க்கே உளதாம்.

60 பாரா தோரேனப் பல்லுயிர் பகர்தலி
ஞராய்ந் துரைக்கி னவைபிற வல்ல
பலபல பேத மிலவேன் போருமில்.

உண்மை தெரியாதோர் என்றமையால் உயிர்கள் பல வென்பது தோன்றுமாயினும், ஆராயுமிடத்து, அவை சிவ முதலின் வேறல்ல. பலவாகத்தோன்றும் வேற்றுமைநிலை உண்மையிலில்லை.

கண்ணின தொளியைக் கண்ணின தெனிலது
திண்ணிய விருளிற் செறிபொரு டெரித்தலு
மின்மை மின்மினி யெனவிரு கண்மணித்
தன்மை தானுந் தாவில ததனாற்
கண்ணின துருவு மதிற்கதி ரொளியு
நண்ணருஞ் சத்தி சத்தர்க ணடிப்பே.

கண்ணினொளியைக் கண்ணிற்குரிய தென்று செப்பின், நிறைந்த இருளிலுள்ள பொருளினை இன்னதென்று கண் காட்ட வல்லதன்று. மின்மினியைப்போலு மென்று கண்ணைக் கூறமுடியாது. ஆதலாற் கண்ணின் வடிவும், அதிற் படுங் கதிரவனொளியும் சிவம், சத்தி என்பாருடைய நாடகமே.

உலகே ழெனத்திசை பத்தென வொருவன்
பலவாய் நின்ற படியிது வென்று
மூனா யுயிரா யுணர்வா யென்று
மானக் கண்ணே மணியே யென்றுந்
தாமே தாமாய்ச் செய்தன ரென்றும்
நாமே சிவமாய் நண்ணின மென்றுங்
காயாய்ப் பழமாய்ச் சுவையாய் நுகர்வு
மோயா துண்போன் றானே யென்று
மறிவோன் றானு மறிவிப் போனு
மறிவா யறிகின் றோனு மறிவுறு
மெய்ப்பொரு டானும் வியந்திது வெனப்படு
மப்பொரு ளியாவு மவனே யென்றுந்
தாய்தலைப் பட்டங் கொன்றாய்த் தென்று
மேதம தறநான் கேட்டே னென்று

மின்னு மின்னு மிறையோ னளித்தவை
பன்னி லெண்ணரும் பான்மைத் தாதலிற்
றருபொருள் கொள்பொரு டருவோன் கொள்வோ
னொருபொரு ளிவ்விய லுவப்பென வுணர்க
நுகர்பொருள் சத்தி நுகர்வோன் சத்தனென்
றிகலறு முணர்வுவஃ தெய்துத லரிதே.

“ தானொருவனுமே பலவாகி நின்றவா ” ஊனாகி யுயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப் பிறவனைத்தும் நீயே யானாய் ” “ கண்ணே கண்ணிற் கருமணியே ” “ தாமே தாமாகச் செய்யுமவன் ”, “ நாமொழிந்து சிவமானவா,” “ காணரியபழமாகிப் பழத்துள் நின்ற விரதங்கள் நுகர்வானுந்தானேயாகி ” “ அறிவானுந்தானே அறிவிப்பான் றானே,” “ தாய் தலைபட்டங் குருகி யொன்றாய்,” “ நான் கெட்டவா.” என்றின்ன திருவாக்குகள் பலவாமாதலின், கொடுக்கும் பொருள், கொள்ளும் பொருள், கொடுப்போன், கொள்வோன், ஆய எல்லாம் ஒரு பொருளின் ஈரியல்பென உணர்க. பொருள்களும் அவற்றை நுகர்பவனும், சத்தி- சிவமெனும் உணர்ச்சி கைவருதல் எளிதன்று.

நானவ னேனுமிது நவைவழி நல்வழி
தானவ னாகை யிதுசா யுச்சிய
மித்திறன் றெளிய வுய்த்திடு மளவு
மியாதொரு வகையி னீதிய தாகத்
தானறி வழியே தலைநின் றென்று
மூனுயிர் சிவத்தி லொடுங்கிட நடத்தி
மூடு முழுமலம் வீடுங் காலைக்
கருவிக ளளவிற் புரிதரு மறிவு
சாக்கிரங் கனவு நீக்கமில் சுழுனை
துரிய மென்றவை பயிறரு மறிவு.

நான் உயிர் அவன் கடவுளென்னும், அறிவு இரட்டுற்ற பாவனை உண்டாக்குவதாற் குற்றமுடைத்து, தான் என்ற ஒரு முதல்அறச் சிவமாதல்சாயுச்சிய முடிவு, அந்நிலையடையுமுன், முத்திக்கு வழியெனத் தானறிந்த ஒரு வழியில் நின்று உடம்பையும் உயிரையும் கனவினு நனவினும் சிவத்தினிடத்தொருங்குவித்து ஒழுகுங்கால், கருவிகளின் ஏற்றத்தாழ்விற் கேற்றவாறு நனவு, கனவு, சுழுத்தி, துரியம் என்ற அவத்தைகளை உயிர்பொருந்தி நிற்கும்.

துரியா தீதந் திரியாத் தன்மையி
லிறையரு ளுதவுங் கறையற மாறி
யறிவே யாகும் பிறியாக் கருவிக
ணிறைமுத லவத்தையி லறிவில தாகத்
துரியா தீதத் தோற்றந்
திரியா ததுநற் சிவகதித் திறனே.

கருவிகளெல்லாம் கழன்றநிலை துரியாதீதம். ஆணவ மலம் நீக்கமுறுங்கால், துரியாதீத நிலையிலுள்ள உயிர்க்குத் திருவருள் கருவிகளைக் கூட்டியபோது உயிரானது ஆணவம் நீங்கிக் கருவிகளோடுங்கூடி அறிவாய் நிற்கும். கருவி முப்பத்தாறோடுங் கூடிய நனவிலே அதீதத்தில் நிலைபெற்று நிற்பதே, சிவகதியாய சுத்தநிலையாம்.

## நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்ப நிராகரணம்

(12) திறம்பெற நீயிங் கறைந்தமை கருதிற்
புவன மியாவையும் புனிதன துருவெனி
லவன்முதற் காரண மன்று மென்னி
னிமித்த காரண நிகழ்த்துக வெனநீ
யவனே காரண மனைத்துமென் றறைந்தனை

மண்டனிக் குலாலன் றண்டசக்க ராதி
காரண மூன்று மோர்பே ரணைந்ததித்
தாரணி யதனிற் கண்டது சாற்றுக.

உலகம்யாவுஞ் சிவமுஞ் சத்தியுமென்னில், முதல்வனே உலகிற்கு முதற்காரணமாக வேண்டும். அவனே நிமித்த காரண மென்றுங் கூறுவாய், அவனதாற்றலே துணைக் காரணமெனின், இறைவன் ஒருவனே முதற்காரணமும் நிமித்தகாரணமும் துணைக்காரணமுமென நீ கூறின், அங்ஙனம் ஒரு பொருளே முக்காரணமுமாயிருப்பதை எங்கேயாவது கண்டதுண்டா ?

அத்த னியற்று மித்தொழில் பிறர்க்கோ
தனக்கோ வீணோ வெனக்கீ தியம்புக
வீணெனிற் பித்தர் மாண்பறுந் தொழில்போற்
றலைமையு மறிவு மிலதென விகழ்வர்
தனக்கெனி லஃதுமு னிற்பதொன் றன்றே
தன்போ லறிஞருந் தலைவரு மிலரான்
மின்போ னிலைமையை வேண்டலும் பழுதே.

இனி, முதல்வன் இயற்றும் ஐந்தொழில் தன்பொருட்டோ, பிறர்பொருட்டோ ? வீணுகவோ ? என்ற வினவிற்கு விடை யாதுபகர்வாய் ? வீணுயின், முதல்வன் தலைமைக்கும் முற்றறிவுக்கும், ஐந்தொழில் இழுக்காமல்லவா ? ஒப்பற்ற அறிவுந் தலைமையுமுடைய முதல்வன், மின்போலத் தோன்றி மறையும் உலகவாழ்க்கையைந் தம்பொருட்டுச் செய்தா னென்றல் பழுது.

பிறர்க்கெனிற் பிறரும் பிறர்க்காம் பொருளும்
பொருட்கமை கருவியு மதற்குபா தானமுஞ்

செய்கையு மென்றோ ரைவகைத் தானோடு
மாறாச் சைவர் கூறா ரென்றா
னின்சித் தாந்த மவசித் தாந்தம்.

பிறர் பொருட்டு ஐந்தொழிலியற்றப் படுமென்னில், தனக்கு வேறாகப் பிறரும் அவர்க்கு வேண்டிய பொருளும் அப்பொருட்குரிய கருவியும், அக்கருவிக்கு முதற்காரணமும் செயற்பாடுமென ஐவகை கூறின், நீ சிவமே யாவுமென்ற கொள்கை எந்நிலை யடையும்?

என்சித் தான்ற வசித்தைமற் றீனா
தசித்தில தென்னி லசீத்ததென் னுலகி
லுலகா யதனும் பூதக் கூட்டஞ்
சலமேற் கோப்புட் டகுமெனச் சாற்றினன்.

இனி சித்தாகிய சிவம், அசித்தாகிய உலகத்தைத் தன்னிடத்தினின்றுந் தோற்றுவியாது. உலகமும் சித்தே யென்னில், உலகில் அசித்து என்பதுதான் யாது? சித்தாயின், உலகிற்கு நிலையாமையில்லை யென்பதாம். உலகாயதரும், பூதக் கூட்டமானது நீர்க்குமிழிபோல நிலையில்லாத தென்பர். நீ அத்துணை நிலையாமையுள்ள உலகத்தை நிலையாய தன்மையுடைய சித்தென்பாய், நீ கூறுவது உண்மையன்று.

தீய கருமச் சீனர்சா வகர்பிறர்
நேய மில்லென நிகழ்த்தின ரிலரே
காண்டல் விரோத நிற்பிறர் கணித்திலர்.

இனி, சீனர், சாவகர் முதலியபிற மதத்தினரும், உடம்பில் ஓரறிவுண்டென்பர். அதனால் உயிருண்டென்பது போதரும். நீ உயிரின்றென்பதால், அவரினுமிழிந்த ஆராய்ச்சியுடையாய், நீ கூறுவது காட்சி முரண்.

ஈண்டுன துரைக்குமற் றியார்கரி யுடலுஞ்
சித்தோ சித்தின் சேர்வாற் சித்தெனிற்
கடப டாதியு முடற்கட் சிதைவேன்
தாபர வுயிர்போற் றநுவோழிந் திவற்றின்
மேவிய வுணர்வு விரவிடு மென்னிற்
சடத்துயிர் போலெனச் சாற்றினை யாகலி
னுடற்குயி ரிறையை யொழிந்துண் டன்றே
தருதிட் டாந்தமுந் தாட்டாந் திகமு
மொருபொரு ளாகி லுவமை பெருதே
யொன்றே யாகி லுடற்கிறை தாபரத்
தோன்றிய நிலையில் வ்சேடமென் னுரைக்க
பூதச் சேர்வைப் பேதமென் றறையிற்
சேர்வைப் பேத மென்கோடு செப்புக
கருமத் தளவில் வருமெனிற் பித்த
ருரையிற் றிகழு முணர்வோழிந் தனையே
கருமஞ் செய்வோன் கடவுளன் றுடலு
மருவிநின் றிருவினை வளரா நுகார
கடவுளு முடலின் கண்பட றுஞ்ச
லிடர்நல முறுத லிறங்குத லேறுத
லெவ்வகை யேனுஞ் செய்கையின் ருதலும்
பலகலை யுலகி னிலவுத லானு
மெண்ணரும் பொருளு மிரவியு மொழியக்
கண்ணென வொன்று காண்கையி னுலும்
பாசப் பகுதியு மீசனு மொழியப்
பசுவு முண்டென் றிசையவேண் டின்றே.

*நீ கூறுவதற்குச் சான்று பகர்வார் யாருளர்? சித்தின்* **சார்பால், உடம்புஞ்சித்தே யென்னில், சித்தாய சிவம்**

எங்கும் நிறைந்திருப்பவும், குடம், துணி முதலியனவும் உடம்புபோலத் திரித்தலைவதின்றி வைத்த இடத்திற் கிடப்ப தேன்? உயிர், இயங்கியற்பொருளிற் செறிந்திருப்பது போல, நிலையியற் பொருளிற் செறியாமை ஏன்? சிவமும் உடம்பிற் செறிந்திருப்பதுபோல, குடம் படம் முதலியவை களிற் செறிந்திருப்பதில்லையென்னில், உயிருடையுடம்புக் கும், பிறவற்றிற்கும் வேற்றுமை கூறி உயிருண்மையை நீ ஒப்பினவனாவை. அன்று. உவமைகூறின், உண்மை அஃதென முடிவுகட்டுதல் தவறாம் எனின், உவமானமும் உவமேயமும் ஒரு பொருளாயிருக்குமாயின் கொன்றை பொன்னைப்போலு மென்பார் இலராவர். பதியாகிய பரம் பொருள் எங்கும் நிறைந்து நிற்குங்கால், மக்கள் உடம்பின் கண், அது மர முதலியவற்றினும் அதிகமாகப்பற்றி நிற்ப தற்கேது வென்னை? பூதக்கூட்டுறவின் பேதம் அதற்குக் காரணமெனின், அப்பேதத்திற்கேது வென்னை? அதற்கு ஏது வினையெனில், வினையியற்றுவார் யார்? முதல் வனோ? முதல்வனெனின் அது பித்தர் கூற்றாமன்றோ? வினைசெய்வோன் கடவுளல்லன். உடல் சடமாகையால், வினையை வளர்க்கவும் வினைப்பயனை நுகரவுங்கூடாது. உடலில் நின்று வினைப்பயனுகர்தலும் அவத்தை யுறுதலும் கடவுளுக்கியையாமையான், காணப்படும் பொருளிற்குங் கதிரவனுக்கும் வேறாகக் கண்ணிருத்தல் போலப் பல கருவி களினுதவி கொண்டு பொருள்களை யறியும் உயிர் உண்டென அறிக.

இதுவெனு மொன்றை யதுவாய்ப் படுத்துப்
போதுமையி னிற்கு மாயையின் போற்பெனப்
போற்பணி யாவும் போன்னாந் தன்மையி
னிட்கள சகளத் திருவுரு நிலையு
மீச னேயெனப் பேசுவ ரன்றி

யருவுரு வாகி வருமுல கேன்னி
லனைத்து மாயை யேனத்தேளி கிலையே
யாவது மாகா தோழிவது மிலதேனும்
பாவக முலகா யதனது பான்மை
கட்கோலை வேகுளி காமங் களவுக
ளுட்படு மிவைவிட மோழியா தாரிலர்
சோம பானஞ் சுராபா னங்க
ளாமேன மறைக ளார்சேவிப் பறைந்தன
மறையோன் புலைச்சியை மருவு மேன்பது
முறையோ வேனிலது புனைமோழி யேன்னிற்
சாதி பேத நீதிநீ தவறினு
மேதியை யேறு விழையா விசும்புங்

இதுவென்ற ஒன்றை அதுவாய் நின்றறிதற் கேதுவா யது மாயையினியல்பு. இறைநிலை அருவமு முருவமுமா மெனப்பெரியோர் கூறுதலின், உலகில் அருவமெல்லாம் சிவம், உருவமெல்லாம் சத்தியென்னில், இரண்டும் மாயையின் காரியமேயேனத் தெளிகின்றுயில்லை. உலகிற்கு முதற்காரணம் மாயை யாதலின் உலகிலுள்ள அருவப் பொருள்களும் உருவப்பொருள்களும் மாயையினின் றெழுந்தனவே. அருவமாய வடிவும் உருவ மாயவடிவும் மாயாகாரியமே ஆகும். எதுவும் ஆகாதென்பதில்லையென்ற கொள்கை உலகாயதனுடையது. அது ஞானிகளுக்கு ஆமெனில் கள், கொலை, களவு, வெகுளி, காமம், என்னு மிவற்றைத் தவிர வேண்டும் என்னுதாரிலர். ஆயின் ஞானிகளுக்கு இவற்ருற் குற்றம் ஏருது என்னில், சோம பானம், சுராபானம், முதலிய செய்யலாமென்று எந்த நன்னூல் கூறுகின்றது? மறையோன் புலைச்சியை மருவலா மென்று சொல்லுவார் யார்? இவையெல்லாஞ் செயற்கைக்

கட்டளையாமெனில், சாதிநீதி கொள்ளாவிடினும், இயற்கை விதிகளுள்ளனவே. எருமையைக் காளை விரும்பாது. பசுவையே அது விரும்பும் ஆதலால் ஞானிகளுக்குச் செயற்கைக் கட்டளையிலவாயினும் இயற்கையாகத் தீயவற்றை உள்ளம் நாடாதென்றறிக. அவர்களெல்லாஞ் செய்யலாமென்பது கருத்தன்று.

கண்ணின துருவு மதிற்கதி ரொளியு
நண்ணருஞ் சத்தி நாடக மேனிலதற்
கேதுவும் பயனு மோத வேண்டு
நின்மொழி விரோதமு நீடுல கியற்கையுந்
தன்மசாத் திரமுஞ் சகலமு மென்செயும்.

கண்ணினுருவும் கதிரொளியும் சிவன்சத்தி நாடகமென்னில், அதற்குக்காரணமும் பயனுங்கூறவேண்டும். நீ கூறுவது நூன்முறைக்கும் உலகியலுக்கும் மாறும். அறம், மறம், நன்மை, தீமை என்பதெல்லாம் பொய்யாம். சிவத்தின் வேறாக உயிரில்லையாயின், அவற்றாற் பயன்யாதுமில்லை.

உலகே ழெனவிறை பலவாந் தன்மை
கடமோடு சாரவங் கலச மாதிக
ளடலுறு குயவ னுயின னென்றற்
றூனே யாகா வவைதா னுகா
னுயின னென்ப தாக்கின னெனவே
யானு யென்ப தனைத்து மவ்வகை
தானு காமையைச் சாற்றிடு மென்க
தாமே யெனுமித் தனியே காரம்
அழிந்தில ரதுவே யாய்த்தில ரதுவிட்
டொழிந்திலர் பிரிவில ரேனுமிவை யுணர்த்துங்

காயும் பழமுஞ் சுவையு நுகர்வ
தாயவன் றனு மவன் முதற் றென்னு
மகிலமுந் தெளிய வறிவோன் றனு
மகிலமு மறிஞரை யறிவிப் போனு
மறிஞர்க் கறிவா யறிகின் றேனு
மறிவிற் கறிபொரு ளாவோன்றனு
மகிலமு மேனி யானவ னென்னும்

"தானொருவனுமே பலவாகி" என்றவிடத்து, ஆகி யென்பது "ஆக்கி" என்ற பொருளுடைத்தாதல் கூடும். அல்லது இறைவனது இரண்டறக்கலந்த நிலைகூறிய வாறும். குயவன், குடம் சால் முதலிய எல்லாம் ஆயின னென்றாற் பொருள்யாது? குயவன் அவையாகான். அவை குயவனுகா. இரண்டறக்கலந்த நிலை கூறுமிடத்து, வேற் றுமையுந் தெரிந்தவாறு காண்க. வானுய் மண்ணுய், என்றவிடத்து, வானும், மண்ணும், வேறிருத்தலானே, அவற்றோடு கலப்புக் கூறப்பட்டது. அவைதானே முதல்வ னென்னிற் கலப்பினைப்பற்றிப் பேசவேண்டியதில்லை. உல கெலாம் இறைவன் திருமேனி யென்ற கருத்துங்காண்க. முதல்வனை யின்றி ஒன்றுமியங்காதென்பது கருத்து. வினைப் பயன் உளவாதலும் அது நுகரப்படுதலும் இறைவனுலா தலின், 'காயாகிப்பழமாகி" யென்ற சுருதி எழுந்தது. உலக மெல்லாவற்றையுந் தெளிவாக அறிவோனும், அறி தற்குரியார்க்கு அறிவிப்பவனும், அறிஞர்க்கறிவாய் நின்று அறிவானும், ஞானிகள் அறியப்படும் பொருளாய் நிற் போனும், இறைவன் என்றறிக.

தருபொருள் கோள்பொருள் தருவோன்கோள்வோ
னொருபொரு ளாயி னுவப்புண் டென்க
நுகர்வோன் றனக்கு நுகர்பொருள் வேண்டிற்

றிகலறக் கிடையா திருந்ததே னிரையமும்
வேண்டா ராயினு மெய்யுறு வியாதிக
ளீண்டா தொழியா திறைக்கிவை யீடல.

கொடுப்பானுங் கொள்வானு மொருவனேயென்னில், நரகமென்பது கிடையாது. வேண்டும்போது புசிக்கலாம். நோயை நீக்கிக்கொள்ளலாம். அவ்வாறு உலகத்திற் காணப்படவில்லையே? வேண்டியது வருவதில்லை, வேண்டாததை நுகரவேண்டியவிதி ஏற்படுகிறது. நோய்கள் விருப்பப்படி ஒழிவதில்லை. இவற்றுல் வருந்துன்பத்தை உடையான் யார்? சிவமன்றெனில், உயிர்தானே அதனை யுடையதாம்,

சத்தியுஞ் சிவமுந் தாமே நுகருமேன்
றித்திற வுணர்வுவந் தெய்துவ தேவர்க்கோ
தமக்கே யென்னிற் ருமுண ராமையு
மமைப்பற வுணர்தலு மவர்க்கடை வன்றே.

சத்தியுஞ் சிவமுந்தாம் எல்லாம் நுகர்வதென்ற உணர்ச்சி யார்க்குளதாம்? சத்தி சிவங்கட்கே அவ்வுணர்ச்சி யுளதா? சத்தி சிவங்கள் உலகத்துன்பத்தை நுகருந்தன் மையுடையன வல்லவே. உலகை அறியுமிடத்துச் சுட்டி யறியு மறிவு அவர்கட்கில்லையே.

நானு மவனு நவையு நலனுந்
தானவ னுகையு நின்சா தனத்தில்
சகயோ கத்தைச் சாயுச் சியமெனப்
பகர்வது பதிபசு பாசத் தவர்க்கே.

எல்லாம் ஒன்றெனக்கூறும் நினக்கு நானென்னும் உயிரும், அவனென்னுன் சிவமும், நவையென்னும் குற்றமும், நலன் என்னும் நன்மையும் உயிர்சிவனுகவேண்டு

மென்பதும் இல்லை. சிவனொடுகலத்தலைச் சாயுச்சியமென்றல், முப்பொருளுண்மை கொள்ளுவார்க்கே பொருந்தும்.

யாதோரு வகையென வோதிய திறைநூல்
சோன்னவற் றொன்றன் றென்னில்வீ டெளிதே
தானறி வழியே தலைப்போருள் பிடித்து
மேனிகழ் பலமும் வீடளித் திடுமே
நிலையாக் கருவியை நிலையாக் கருதிப்
புலையா டுதலு முலகா யதன்போருள்.

தான் அறிந்த நெறியில்நிற்றல் முத்திக்கேதுவா மெனில், வீடடைதல் அரியதாகாது, உலகாயதனும் சித்தாந்த முத்தியெய்தலாமே.

குட்டிய மின்றிநற் கோல மெழுதுத
லிட்டம தாயிற் கருவியு மிடங்களுங்
கருத்துற வுரைக்கத் தெரித்திடு மதீதத்
தறிவோன் றில்லோர்க் கிறையரு ளுதவுதல்
பிறிவற்றி வரிய செறியிரு ளிடத்தோ
ரந்தகர்க் காண வந்தோ ரெமமை
நீவிருங் காண வேண்டு மென்றுங்
கெடுத்தோர் தீபங் கோடுத்ததை யொக்கு
மிச்செயற் கிறைவன் கோச்சைய னன்றே.

சுவரின்றிச்சித்திரம் எழுதமுடியாது. கருவிகள் கழன்ற இடத்து உயிர் அறிவைப் பெறுதல் யாங்ஙனம்? கருவி கழன்ற அதீதநிலையில் சிவன் திருஞானம் நல்குமென்றல், இருளிற் கிடக்குங்குருடர்க்குக் கண்ணுடையான் தன்னைக் காண விளக்குக் கொடுத்துதவியது போலாம். அங்ஙனம் அறிவை நல்குதற்கு, இறைவன் வகைதெரியாதவனல்லனே

கருவி வசத்திற் றெரிவுறக் காண
வேண்டுந ரிலரா லீண்டறி வியாவுஞ்
சிவமே யென்று செப்பினை யவமுறு
பொறிபுல னறியா வறிவது பிரம
மென்றோர்க் குன்போ லிடர்ப்பட லிலதே
யேற்றங் கருவி யிருபதோ டிரண்டும்
போற்றுமைந் தவத்தையும் புகறிரி மலமு
மீசனு முயிரும் பேசினை யஃதொழிந்
தொன்றே யாகு மென்றநின் னியல்பு
தாயர் மனைவியர் தாதியர் தவ்வைய
ராயவ ரெவரையு மோர்மையிற் காணுங்
கோகழி தூர்த்தர் கொடுந்தொழி றகுமே
யாக மற்றத னருணிலை தன்னிலை
யேக நாயக னாகிய விறைநிலை
நாசமில் பாசம் வீசிய வியனிலை
யினையவை யொன்று நினைவினு மின்றி
யுண்டெனு முணர்விற் கண்டது கருதி
லிழுக்கெனும் புலன்வழி யொழுக்கமு மதுவாக்
கொண்டு பண்டையி லெண்டரு மடங்கு
வந்தவர் செய்த தந்தையை யன்றே
புன்மைக ணீங்க வுண்மை கேண்மதி.

இனி, கருவிகளைக்கொண்டு அசத்தாய உலகினையறிந்து கொண்டிருப்பதைச் சிவஞானிகள் வேண்ட மாட்டார். அவர்களே அவ்வாறிருப்ப, கருவிகளைக் கொண்டறியுமறிவுஞ்சிவமே யென்றனை, மாயப்பொறிகள் உலகை யறியா வாகலின், அவற்றின் வாயிலாகப் புலனை யறிவது சிவமே யென்று நீ கூறியது மாயாவாதிக்கு மொவ்வாது. எல்லா

வற்றையுமறியும் பிரமம், கருவிகள் வாயிலாக அறிவதாக மாயாவாதி கூறுவதில்லை. மாயாவாதி பிரமத்தை அறிவென்றும் உலகம் நிலையற்றதென்றுங் கூறினன். நீ எல்லாம் சித்தேயென்பாய். அவன் கருவி பதினான்கும், அவத்தை மூன்றுங்கூறினன், நீ, சைவனாதலின், இருபத்திரண்டு கருவியும் ஐந்தவத்தையும் மும்மலமும் கடவுளுமுயிருமுள வென்றுகொண்டாய். அவற்றையெல்லாம் விட்டு இப்போது எல்லாம் சிவமாயவொன்றேயென்று கூறுதல் தாயர், தங்கையர், தாதியர், தமக்கையர், ஆய எல்லாரும் விடயப் பார்வையாற் பெண்டிரே யெனக்காணுங் கழிகாமுகரது கொடுந்தொழிலை யொக்கும். உயிர்க்கறிவில்லை, பொறிவாயிலாக அறிவானுஞ் சிவனேயெனக்கூறிப் பொறிவழியொழுகலை ஒழுக்கமாகக்கொண்டு, கட்டுநிலையிலும். முத்திநிலையில் எண்மடங்கு அஞ்ஞானமுற்றாய், உன்னைக் குறைகூறாது உனது அறியாமையையே குறைகூற வேண்டும். உனது அறியாமை நீங்க உண்மை கேட்பாயாக.

## சைவவாதி சங்கற்பம்

அறிவா யறியு மறிவுயிர் கேவலத்
தறிவில னிருளோடும் பிரிவில னண்ணல்
கலைமுத லாக நிலவிய கருவிகள்
விளக்கென வுதவுந் துளக்கறப் பொருந்தி
யிருவினை நுகர்வில் வருவினை செய்து,

சகலநிலையில் அறிவாயறியுமுயிர், கேவல நிலையில் அறிவற்றுக்கிடக்கும் ஆணவமலத்தோடுள்ளது. இறைவன் கலைமுதலிய கருவிகளைக் கண்ணுக்குக்காட்டாய விளக்குப் போல், உயிர்க்குக் கூட்டுவன். அவைகளைப் பொருந்தி, உயிர் இருவினைப்பயனை நுகருங்கால், வரும் பிறவிக்கு வினையைத் தேடிக்கொள்ளும்.

மாறிப் பிறந்து வருநெடுங் காலத்
திருண்மல பாகமுஞ் சத்தி நிபாதமு
மருவுழி யருளுரு மன்னவ னணைந்து
செல்கதி யாய்ந்து பல்பணிப் படுத்திக்
கருவியு மலமும் பிரிவுறப் பிரியா
ஞான நல்கலுந் தானது நோக்கித்
தன்னையு மதனையுந் தன்முதற் பொருளையு
மின்னவேன் றறியா விருவரு முயங்கி
யொன்ரு யுறுபய னுவப்பு
மின்ருய் நிற்கு மிதுசிவ கதியே. 12

பலபிறவிகளெடுத்து அலமருங்கால் மலபரிபாகமும் அருள் வீழ்ச்சியும் மருவும். அப்போது அருள்வடிவாய முதல்வன் தோன்றி உயிர் செல்லுநெறிக்கேற்றவாறு, சரியை, கிரியை, யோகங்களில் நிறுத்தி, அவை முற்றித் தனிநிலையுங் கலப்பு நிலையும் நீங்கவே, நீங்காத உயர் ஞானத்தை நல்குவன், அப்போது தன்னையுந் தலைவனையும் அறிவையுஞ் சுட்டியறியாது, உயிர் சிவத்தோடுகூடி ஒருமுதலாகி விருப்பும் வெறுப்பும் அற்ற நிலையே முடிந்தகதியாம்.

### சைவவாதி சங்கற்ப நிராகரணம்

(13) இதுகதி யாக முதலறி வுயிரேற்
பொறிபுல னிங்க வறிவுயி ரன்றே
யடைகாய் நூறி னிடைசேர் சிவப்பென
விந்தியத் தொகையின் வந்தறி வொன்றுநின்
றின்ரு மென்ற லன்றே யெந்தை.

அநாதியே உயிர் அறிவாயின் பொறிபுலனில்லா விடத்து உயிர் அறிதல் கூடுமா? அறிதல் கூடாதாயின்

உயிரியனில்புயாது? பொறி முதலிய கருவிகளோடுகூடிய போதறிந்தும், கூடாதபோது அறிவற்று மிருப்பது உயிரியல்பென்னின், பொறிகளின் புணர்ப்பாலறிவும் அஃதின்மையா லறியாமையுங் கூறின், அறிவு தோன்றி யழியும், மீண்டுந் தோன்றுமென்னுங் கணபங்கவாதம் உன்கொள்கையாமா?

அறிவில னதீதச் சேறிவிலென் றுரைத்த
நின்மொழி விரோதமும் பின்முன் மலைவு
மன்வயி னிகழா மலமிரு ளிறையொளி
யான்மா விளக்கிற் றகுமருட் கலாதிக
ளினமி லிவனிடத் தெவ்வா றிசைந்தன
விசைந்த தாயினு மிசையா தாயினு
மசைந்திடு முத்தி சாதன மவமே.

அல்லது முன்னெடு பின்மலைவுறும் இருகருத்துக்களை நீ கூறியவனுவை. ஆணவமலம் இருள்போன்றது, இறைவன் பேரொளிமயன். உயிர் கருவிகளாலறிவது மயக்கவறிவு. அம் மயக்க அறிவு உயிர்க்கு நல்லறிவாக எவ்வா றிசையும்?

சத்தி நிபாதமோ தகுமல பாகமோ
வுய்த்த காரண காரிய மோதுக
பாகங் காரண மாகின் மற்றது
காலா வதியிற் காயா வதியின்
மேலா யென்னும் வினையுறு மவதியிற்
றுயரென வுயிர்க்குத் தோன்றிடு மவதியி
னயமிகு மிறைவ னல்கிடு மவதியி
லேதிற் கூடு மோதுக விருவினை

யோத்த வேல்லையில் வைத்தன ரேன்னி
லருவினை தூக்க வருவினை நில்லா
வோருவினை புரிகா லிருவினை யாகா
வோப்புறு மாறு செப்புக தேசிக
னருளுரு வேன்ற போருளினை யாயின்
மாயா வோருவன் மாயா வுருவினை
யேயா னேய்ந்தவ ரேம்ம னோரே.

இனி, நீ கூறு முத்தியையாய்வாம். சத்திநிபாதமாய அருள்வீழ்ச்சி முந்தியதோ? மலபரிபாகம் முந்தியதோ? எது காரணம்? எது காரியம்? மலபரிபாகம், அருள் வீழ்ச்சிக்குக் காரணமென்னில், அம்மலபரிபாகம் வருவது எண்ணிறந்த உடம்புகளெடுத்து வருங்கால் இன்னஉடம்பு எடுத்த காலத்தில் வருமென்ற நியதிப்படியா? நல்வினை தீவினை துலையொத்து நின்றபோதிலோ? உயிர்க்குப் பிறவித்துயர் தோன்றியபொழுதிலோ, இறைவன் அருள் புரியக் கருதிய எல்லையிலோ? எப்போதெனக் கூறுக. இருவினையொப்பு ஏற்பட்ட பொழுது, மலபரிபாகம் வருமென்னில், இருவினை யொத்தலாவது யாது? அருவாய வினைகளைத் துலையினிரு தட்டில் உலகப் பொருள்களை நிறுத்தல்போல, நிறுக்கமுடியுமா? புண்ணியம் புண்ணிய மாயும், பாவம், பாவமாயுமிருத்தலால், ஒரு செயலே இரு தன்மையுடையதாகாது. இருவினையொப்பு யாதெனத் தெளிவாகக்கூறுக. இறைவன் அருள்வடிவமுடையானென்னில், அழியாத் திருமேனியுடையவன். மாயையினாய உடம்பினைப் பொருந்தான். உயிர்களைக் காக்கப்பொருந்து வானென்னில், உயிர்க்குழாத்தில் ஒருவனாக இறைவன் கருதப்படுவன்.

பல்பணி ஞான காரண மென்னிற்
றொல்பணி தோறும்பயன் றொடுப்பத னாலு

மோருபணி செய்யாச் சிரபுரச் சிறுவரு
மரச ராய தருணத் தலைவரு
முதிர்பர சமயத் திதமுறு மரசரு
ஞானம் பெற்ற நன்மையி னாலு
மீனமில் பணியருட் கேதுவன் றென்றான்
ஞானோற் பத்தி நிமித்தமித் தொழிலென
வேனோர்க் கிறைநூ லியம்பிற் றென்னும்.

சரியை, கிரியை, யோகமென்பவற்றின் பயனாக ஞானம் உளதாமெனின், அவற்றாற் பதமுத்திகள் மூன்றுங் கிட்டுமென, அருள்நூல்கள் கூறும். தேவார முதல்வர் மூவரும், சரியை, கிரியை, யோகங்களில் நில்லாமே, ஞானம் பெற்ற தற்கேது இறைவனேயன்றி அந்நெறிகள் காரணமாகாமை தெளிவு. ஞானம் உண்டாவதற்கு நிமித்தமாமன்றி, அவைகள் முதற்காரணமாகா.

கருவியு மலமும் பிரிவுற வருடரு
மென்றனை கேவலத் தேது மறிவிலன்
றுன்றிய சகலத் தருணிலை தோன்றா
வெவ்வ வத்தையி லிறையருள் பெறுகுவம்.

கருவியும் மலமும் நீங்கவே, அருளொளி யுளதாமென்றனை. மலத்தொடு கூடிய கேவல நிலையில் அருளொளி யுண்டாகாது. கருவிகளொடு கலப்புற்ற நிலையிலும் அது உண்டாகாதெனின், பின் எப்போது உயிர்க்கு இறையொளியுளதாம்?

செவ்விய ஞான தரிசன மாவது
நால்வகை மாயைப் பால்வரு ஞானம்
பண்டை ஞான மிதுவறி தாவரக்

கண்ட ஞான மிதுவரக் காணி
லீன ஞானிக ளென்போர் யாருமின்
ஞான வேற்றுமை நாடலு மரிதே.

தெளிவாக உயிரின் அனுபவத்தில் உடல், கரணம், உலகம். நுகர் பொருளாகிய இவற்றையறியும் அறிவேயுள்ளது. இவ்வறிவு நீங்க மேல்வரு மறிவுயாது? அதுவும் இவற்றைக்காணு மறிவாயிருப்பின், வீடு சேர்ப்பிக்கும் ஞானத்திற்கும், மாயையினாய பொருளையறியும் ஞானத்திற்கும் வேறுபாடென்னை ?

தானு ஞானமுந் தலைவனு மென்றனை
ஆனபி னிவனு மிவனது ஞானமும்
பாசமும் பாச ஞானமு மென்றிவை
பேசுவ ரொன்றாப் பெற்றிய வாகலின்
மும்மைப் பொருட்கு மும்மைத் தன்மை
செம்மைத் தென்னிற் செலவுக ளெழுதுக.

இறை, உயிர், இறைஞானமென்ற மூன்றுங் கூடுமென்றனை. இறை, இறையறிவு உயிர், உயிரறிவு, பாசம், பாச அறிவு எனப் பொருள், ஆறும். இவற்றுள் பாசம் நீங்கியது கூறினாய். உயிரறிவும், பாச அறிவும், எவ்வாறொழிந்தனவென்று நீ கூறவில்லை.

இருவருங் கூடி யொருபய னாய்த்தேன்
றருளினை யிவ்வா றபேதிக ணிலையே.

### சித்தாந்த சைவாசாரியர் அநுக்கிரகம்

பதிபசு பாச முதிரறி வுகளுட
னாறு முன்னர்க் கூறாப் பின்ன

ரிருபோரு ணீத்துமற் ரேருநால் வகையு
மீன்மின் ஞாதுரு ஞான ஞேயமென்
றிசைய மூன்ருய்ப் பசுபதி யென்றவற்
றிரண்டா யிரண்டு மோன்றிஞேன் ருகத்
திரண்டாம் பயனெனுந் திருவரு டோளியிற்
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்ரு
மென்றிறை யியற்கை யியம்புத றகுமே

உயிரு :முதல்வனும், முத்தியில் ஒரு முதலாமென்பது ஏகான்மவாதச் சார்புடைய கொள்கை. மேற்கூறிய ஆறு பொருள்களுள். பாசமும், பாசஞானமு மொழிந்தவிடத்துப் பொருள் நான்காம். பசுஞான மொழிய. நீ கூறிய மூன்றும் உள்ளன. பின்னர், பசு, பதியென இரண்டே நின்று, அத்து விதக்கலப்பால் ஒருமைப்பட்ட தன்மையே, திருவாசகத்துள் 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்ரும்' என்ற திருப்பாட்டிற்குறிக்கப்பட்டது.

ஒன்ரு மென்ற லன்றியு முவப்பு
மின்ரு மென்ரு லென்பய னியம்புக

சீவனும் சிவமுமொன்ருய விடத்தே, உவப்பில்லையென்னில், இன்பம் .பெறுவானில்லையென்பதே முடிவாம். அதனுற் போந்த பயன் யாது ?

என்றனை வினவு மியாவும் விளங்க
வென்றிகோள் கருத்தின் விரும்பினை யாயி
னதிக்கரை யானெனக் கோதித்தல மந்து
வெண்ணெயம் பதிதிகழ் மெய்கண்ட வனரு
ளுண்ணிலை யுடையோ ஞெருவ னுரைத்த

தவப்பிர காசத் தன்மையில் விரித்த
சிவப்பிர காசச் செழுந்தமி ழுண்மையை
யருளுட னுய்ந்து கோள்ளத்
திருவருள் வினவ றிருந்திடு மன்றே.

பின், வீட்டில் உயிருஞ் சிவமும் எவ்வாறிருப்பவென்னில், அதுவும் பிறவும், அறிய விரும்பின், சிவப்பிரகாசத்தினைத் திருவருளால் ஆய்ந்தறிக,

சங்கற்ப நிராகரணம்

உரைநடையுடன்

முற்றிற்று.

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## சமய இலக்கியக் கட்டுரைகளுடன் வெளிவரும்

## திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப்பொருள் முதலியவை குறித்துத் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது. சைவசமயிகள் அனைவரும் பயில வேண்டிய இதழ். சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

ஆண்டுக் கையோப்பம்

உள்நாடு ரூ. 2—25 வெளிநாடு ரூ. 3—00

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.